விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 225 வள்ளுவர் ஆண்டு 2057 ஆடி 16 சனிக்கிழமை (01.08.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## ஈஸ்டர் தாக்குதலைத் தடுக்கத் தவறியமைக்காக

# பூஜித, ஹேமசிறிக்கு மரண தண்டனை

## கொழும்பு உயர் நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

ஈஸ்டர் தாக்குதலைத் தடுக்கத் தவறியமைக்காக முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தரவுக்கும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்ணான்டோவுக்கும் கொழும்பு உயர் நீதிமன்றம் நேற்று மரண தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தது. (04ஆம் பக்கம் பார்க்க)


சிறை அழைத்துச் செல்லப்படும் பூஜித மற்றும் ஹேமசிறி

## ஒகஸ்ட் மாதத்தின் எரிபொருள் விலையில் மாற்றமில்லை

(கொழும்பு)

மாதாந்த எரிபொருள் விலை 15ஆம் பக்கம் பார்க்க

## புளியங்குளத்தில் பேருந்து மோதியதில் குடும்பஸ்தர் பலி

(வவுனியா)

வவுனியா ஏ9 வீதி புளியங்குளத்தில் இடம்பெற்ற விபத் 15ஆம் பக்கம் பார்க்க

## அநுர அரசின் காலத்தில் ஊடகவியலாளர்களுக்கு நீதி கிடைக்கும்

### யாழில் ஊடகப் பிரதியமைச்சர் கௌசல்ய



(யாழ்ப்பாணம்)

அநுர அரசின் காலத்தில் வடக்கு, கிழக்கில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்களுக்கு நீதி கிடைக்கும் என ஊடகப்பிரதி அமைச்சர் கௌசல்ய ஆரியரத்ன தெரிவித்தார்.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் ஊடகவியலாளர்களை ஊக்க மூட்டும் நிகழ்ச்சித் திட்டத்தில் நேற்றுக் கலந்து கொண்ட போது ஊடகவிய 02ஆம் பக்கம் பார்க்க

## வடக்கு மக்களின் நம்பிக்கையை முழுமையாகப் பாதுகாப்போம்

### அமைச்சர் சந்தன அபேரத்ன

(வவுனியா)

வடபகுதி மக்கள் அரசாங்கத்தின் மீது வைத்த நம்பிக்கையை முழுமையாகப் பாதுகாப்போம்.மீண்டும் ஒருபோதும் இனவாத அல்லது மதவாத மோதல்கள் ஏற்பட இடமளிக்கப் போவதில்லை எனப் பொது நிர்வாகம், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்றங்கள் அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்தார்.

பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வடக்கு பிராந்திய ஆவணக் காப்பகத்தைத் திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று 16ஆம் பக்கம் பார்க்க

## தகவல் திணைக்களப் பணிப்பாளர் சந்திப்பு




02ஆம் பக்கம் பார்க்க

## வட்டுவாகல், கேப்பாப்புலவு, கிளிநொச்சியில் விரைவில் காணிகளை விடுவிக்க நடவடிக்கை

### பாதுகாப்புப் பிரதியமைச்சர் அருண ஜெயசேகர உறுதி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் வட்டுவாகல், கேப்பாப்புலவு மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தின் சில காணிகளை விரைவில் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பாதுகாப்புப் பிரதியமைச்சர் மேஜர் ஜெனரல் அருண ஜெயசேகர தெரிவித்தார்.

முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் இராணுவப் பயன்பாட்டிலுள்ள காணிகளைச் சிவில் நிறுவ 15ஆம் பக்கம் பார்க்க



## உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள இராஜேஸ்வரி அம்மன் வீதி மீண்டும் மூடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

இராணுவ உயர்பாதுகாப்பு வலயத்தில் இருந்து கடந்த 2024 விடுவிக்கப்பட்ட பலாலி இராஜ இராஜேஸ்வரி அம்மன் கோயிலுக்குச் செல்லும் நிரந்தர வீதி கடந்த (16) ஆம் திகதி திருவிழாவிற்காகத் திறக்கப்பட்ட நிலையில் நேற்று (31) மீண்டும் மூடப்பட்டுள்ளது.

ஆலயப் பகுதி விடுவிக்கப்பட்ட போதும் மக்கள் செல்லும் 02ஆம் பக்கம் பார்க்க

## இராணுவத்தின் புதிய தளபதியாக நிலந்த நியமனம்



15ஆம் பக்கம் பார்க்க

## ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரி கவனயீர்ப்பு



02ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தகவல் திணைக்கள...



அரசாங்கத் தகவல்திணைக் களத்தின் பணிப்பாளர் நாயகம் எச். எஸ். கே.ஜே.பண்டார மற்றும் உயர் அதிகாரிகளைக் கொண்ட குழுவினர், நேற்று வெள்ளிக்கிழமை 'வலம்புரி' நாளிதழின் தலைமை அலுவலகத்திற்கு உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது வடக்கு மாகாண ஊடகவியலாளர்களின் பணிகள், பிராந்திய ஊடகங்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் அரசாங்கத்தின் ஊடகக் கொள்கைகள் குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. (ம-7)

## இராஜேஸ்...

வீதி மக்களின் காணியூடாக தற்காலிக பாதையூடாகவே செல்லும் வகையில் கடந்து ஆண்டு திறக்கப்பட்டதுடன் நிரந்தரப் பாதை மூடப்பட்டே இருந்தது.

எனினும் சில நாட்களில் அப்பகுதியில் உள்ள மக்கள் தங்கள் காணியைச் சுற்றி வேலியை அமைத்ததால் மக்கள் ஆலயத்துக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டது.

இதையடுத்து ஆலய நிர்வாகத்தினர் இராணுவத்தினரிடமும் பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரனிடமும் கோரிக்கை வைத்தனர். இது குறித்து இராணுவத்தினருடன் கலந்துரையாடி நிரந்தரப் பாதை திறக்கப்பட்டது.

இருப்பினும், ஆலயத்துக்கு வருபவர்கள் அடையாள அட்டை இலக்கம் பதியப்பட்ட பின் வீதியால் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இவ்வாறான நிலையில் நேற்று முன்தினம் திருவிழா முடிந்த நிலையில் நேற்று 31 ஆம் திகதியுடன் நிரந்தரப் பாதை மூடப்பட்டுள்ளது. (ம-7,33)

## அநுர அரசின்...

லாளர்களால் கேட்கப்பட்ட கேள்விக்கு பதில் வழங்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழர் தாயகத்தில் கடந்த காலத்தில் படுகொலை செய்யப்பட்டும் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்களுக்கு நீதி வழங்கப்படும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க கூறியிருந்த போதிலும் தற்போது வரை எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாதது ஏமாற்றமளிப்பதாக ஊடகவியலாளர்களால் சுட்டிக் காட்டப்பட்டது. இதற்குப் பதிலளித்த பிரதியமைச்சர், சகல கோப்புகளும் தூசு தட்டப்பட்டுவருகிறது. எல்லாவற்றுக்கும் இந்த அரசாங்கத்தின் காலத்தில் நீதி கிடைக்கும் எனத் தெரிவித்தார்.

தொடர்ந்து வடக்கு கிழக்கில் காணப்படும் ஏனைய பிரச்சினைகள் போன்று ஊடகவியலாளர்களது பிரச்சினையும் பிரத்தியேகமானவை. யுத்த காலத்தில் அடக்கப்பட்ட தமிழ் மக்களின் குரலாக செயற்பட்ட காரணத்தினால் தான் அவர்களுக்கு இந்த நிலை நேர்ந்தது. வடக்கில் மட்டும் 58 ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டும், கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டும் உள்ளனர். லசந்த விக்கிரமதுங்க, பிரகீத் எக்னலியகொட ஆகியோரின் வழக்கு விசாரணைகளில் ஆர்வம் காட்டும் இந்த அரசு நிமலராஜன், சிவராம் உள்ளிட்ட தமிழ் ஊடகவியலாளர்கள் விடயத்தில் பாரபட்சமாக செயற்பட்டு வருகிறது என ஆதங்கத்துடன் சுட்டிக்காட்டினர்.

இதற்குப் பதிலளித்த பிரதியமைச்சர் விசாரணை அமைப்புகள் சுயாதீனமாக இயங்குகின்றன. அதில் அரசு எந்தத் தலையீடும் செய்யாது. அதே நேரம் தமிழர், சிங்களவர் என்ற அடிப்படையிலும் விசாரணைகளில் முன்னுரிமை காட்டப்படாது எனப் பதிலளித்திருந்தார். இதனையும் ஏற்கமறுத்த ஊடகவியாளர்கள், ஆட்சி பொறுப்பேற்று இரண்டு ஆண்டுகள் நெருங்கும் நிலையில் கோப்புகள் தூசு தட்டப்பட்டிருந்தால் அது தொடர்பில் நாங்கள் அறிந்துகொள்ளக் கூடியதாக இருந்திருக்கும். ஆனால் இதுவரை அப்படி எதுவும் நடைபெறவில்லை. எப்போது விசாரணை ஆரம்பிக்கும் எனக் கேள்வி எழுப்பியிருந்தனர்.

உடனடியாகக் காலத்தை குறித்து எதுவும் சொல்ல முடியாது எனவும் முன்னைய அரசாங்கங்களை விட தற்போதைய தமது தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இது விடயத்தில் நேர்மையாகச் செயற்படும் என்றார்.

இதன்போது மீண்டும் ஊடகவியலாளர் தரப்பில் லசந்த, பிரகீத் விடயங்களை போன்று தமிழ் ஊடகவியலாளர்கள் விடயத்தை விசாரித்தால் அதற்கு காரணமானவர்களாக இராணுவத்தினரே கண்டறியப்படுவார்கள். அதனால் தான் இராணுவத்திற்கு எதிராக விசாரணை செய்வதைத் தவிர்க்கப் பாரபட்சம் காட்டப்படுகிறது என்பதை நாம் உணர்கின்றோம். ஊடக அடையாள அட்டை, சம்பள பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் ஏனைய பகுதிகளில் உள்ள ஊடகவியலாளர்களைப் போன்று எமக்கும் உண்டு. அதனை மறுப்பதற்கில்லை. ஆனால் வடக்கு, கிழக்கில் உள்ள ஊடகவியலாளர்களை பொறுத்தவரை படுகொலை செய்யப்பட்டும், கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட எமது சக ஊடகவியலாளர்களுக்கு நீதி வேண்டும். அதைச் செயற்படுத்தும் பட்சத்தில் அதன் பின்னர்தான் ஊடகத்துறையின் வளர்ச்சி, முன்னேற்றம் தொடர்பில் நாம் கவனம் செலுத்த முடியும் என்பதனை ஜனாதிபதிக்கு தெரியப்படுத்துங்கள் எனத் தெரிவித்தனர். (ம-7,30,33)

## சாவகச்சேரியில் வர்த்தக சங்க அலுவலகம் அடித்துடைப்பு



(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரப் பகுதியில் தனங்கிளப்பு வீதியில் அமைந்துள்ள சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற அலுவலகம் நேற்று வெள்ளிக்கிழமை நண்பகல்வேளையில் பெண் ஒருவரால் அடித்துச் சேதப்படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வர்த்தக சங்க பிரதிநிதிகளால் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,30)

## ஊடகவிய...

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்கள், ஊடகவியலாளர்கள் மீதான வன்முறைத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் நீதியான விசாரணைகளை மேற்கொள்ள வலியுறுத்தி யாழ்ப்பாணம் மாவட்ட செயலகம் முன்பாக ஊடகவியலாளர்களால் நேற்று கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்திற்கு இரண்டு நாள் விஜயம் மேற் கொண்டுள்ள வெகுஜன ஊடக பிரதி அமைச்சர் கலாநிதி கௌசல்ய ஆரியரத்ன பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்கவுள்ளார்.

முன்னதாக யாழ். மாவட்ட செயலகத்தில் ஊடகவிய லாளர்களுக்கான கருத்தரங்கில் கலந்து கொள்ளவிருந்த நிலையிலேயே குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ம-7,30,33)


# மரண அறிவித்தல்

## கந்தையா நாகேந்திரதாஸ்

### (சரவணாஸ் ஸ்டோர்ஸ், நல்லூர்)



தோற்றம் 1953.09.10 — மறைவு 2026.07.31

நல்லூரைப் பிறப்பிடமாகவும் இல. 60, விபுலானந்தர் வீதி, அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நாகேந்திரதாஸ் அவர்கள் நேற்று (31.07.2026) வெள்ளிக்கிழமை அன்று இறை பதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சிவகாமி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கைலாயபிள்ளை - யோகம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் பத்மராணி அவர்களின் அன்புக் கணவரும் துஷ்யந்தன், காலஞ்சென்ற நிரஞ்ஜீவன் மற்றும் சுஜீவன், கார்த்திகா, பார்த்தீபன், சாம்பவி ஆகியோரின் அன்புத் தந்தையும் சர்மிளா, கவிதா, குமார், ஆனந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும் நாகேஸ்வரி, நாகராசா, காலஞ்சென்ற நாகேந்திரம் மற்றும் நவரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் குணபூஷணம், ஜானகி, தேவகி, உருத்திரகுமார், காலஞ்சென்ற விஜய குமார் மற்றும் கோகிலராணி, சந்திரகுமார், சோதிராணி, புஷ்பராணி, ஸ்ரீகுமார், கலாராணி, அசோக்குமார், திலீப்குமார் ஆகியோரின் மைத்துனரும் கா்லஞ்சென்ற ஜீவன் மற்றும் நிதுஷா, மிதிஷா, மிதுன், நிலன், அபிஷா, அஸ்வின், அகானா, ஆரவி, அன்சிகா, கைதுயன், கவிஷா, நயினன், ஆதிரா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் திங்கட்கிழமை (03.08.2026) அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2.00 மணியளவில் தகனக்கிரியைக்காக சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

இல.60, விபுலானந்தர் வீதி,
அரியாலை.

(2550)

தகவல் : குடும்பத்தினர்
076 437 2971 - பேரன்



## அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்மன் ஆலய

## அவசர பொதுக்கூட்டம் - 2026

அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்மன் ஆலயம் பாலஸ்தானம் செய்வது தொடர்பில் கலந்துரையாட இருப்பதால் அடியவர்கள் அனைவரையும் 02.08.2026 ஞாயிறு காலை 10.00 மணிக்கு சமூகமளிக்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

- செயலாளர்


(C-6147)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இலங்கையின் உணவுப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்! 15 லட்சம் பேர் பாதிக்கப்படலாமென எச்சரிக்கை

**(வோஷிங்டன்) ..........................**

**2027ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரை இலங்கையில் சுமார் 10 இலட்சம் முதல் 15 இலட்சம் வரையான மக்களுக்கு மனிதாபிமான உணவு உதவி தேவைப்படக்கூடும் என அமெரிக்காவின் ஆதரவுடன் செயற்படும் பஞ்சம் தொடர்பான முன்கூட்டிய எச்சரிக்கை அமைப்புகளின் வலையமைப்பு தெரிவித்துள்ளது.**



அந்த அறிக்கையின்படி, எதிர்வரும் ஒக்டோபர் முதல் டிசெம்பர் வரையிலான காலப் பகுதியில் நாட்டின் உணவுப் பாதுகாப்பு நிலை மேலும் சவாலானதாக மாறக் கூடும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டு ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிக்குப் பின்னர் நகர்ப்புற வேலை வாய்ப்புகளில் ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டிருந்தாலும், உணவு, போக்குவரத்து, மின்சாரம் மற்றும் குடிநீர் உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகளுக்கான செலவுகள் தொடர்ந்து அதிகரித்து வருவதாக அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த செலவின அதிகரிப்புக்கு ஏற்ப மக்களின் வருமானம் உயராத நிலையில், குடும்பங்களின் பொருளாதார பாதிப்பு மேலும் அதிகரிக்கக் கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் விளைவாக, குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள் உணவின் அளவையும் நாளாந்த உணவு வேளைகளின் எண்ணிக்கையையும் குறைக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பாக, ஈர வலய பெருந்தோட்டப் பகுதிகளில் வசிக்கும் குறைந்த வருமானம் கொண்ட தொழிலாளர்கள், மேற்கு, வடக்கு மற்றும் கிழக்கு கடலோரப் பகுதிகளைச் சேர்ந்த கடற்றொழிலாளர் குடும்பங்கள், அத்துடன் நகர்ப்புற மற்றும் நகர்ப்புறத்தை அண்மித்த பகுதிகளில் வசிக்கும் வறிய மக்கள் ஆகியோர் அதிக ஆபத்தில் உள்ள குழுக்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேலும், போக்குவரத்து செலவுகள் மற்றும் விவசாய உற்பத்திக்கான உள்ளீட்டு செலவுகள் அதிகரித்துள்ளதால், சந்தையில் உணவுப் பொருட்களின் விலைகள் செப்டெம்பர் மாதம் வரை உயர்ந்த நிலையிலேயே நீடிக்கக்கூடும் எனவும் தெரிவித்துள்ளது.

தற்போது பெரிய அளவிலான அவசர மனிதாபிமான உணவு உதவித் திட்டங்கள் நடைமுறையில் இல்லாத நிலையில், நாட்டின் உணவுப் பாதுகாப்பு தொடர்பான சவால்கள் எதிர்வரும் மாதங்களில் மேலும் தீவிரமடையக்கூடும் எனவும் அந்த அமைப்பு எச்சரித்துள்ளது. (நி)



வட மாகாணத்தின் EDL Lanka (Private) Limited நிறுவனத்திற்கு புதிய பணிப்பாளராக எந்திரி மைதிலி தயாபரன் நேற்றையதினம் பதவி ஏற்றுள்ளார்.

வட மாகாணத்தின் முதலாவது பெண் பணிப்பாளராக தற்போது பதவியேற்றுள்ள இவர் இதுவரை வவுனியா பிரதேச காரியாலயத்தில் பிரதம மின்பொறியியலாளராக பணியாற்றியுள்ளார். இதேவேளை வட மாகாணத்தின் EDL Lanka(Private) Limited நிறுவனத்தின் பணிப்பாளராக கடமையாற்றிய எந்திரி செல்வராசா பிரபாகரன் ஓய்வு பெற்றுச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## விலை உயர்வுக்கு மத்தியிலும் மதுவரி வருவாய் அதிகரிப்பு

(கொழும்பு)

2026ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் இலங்கை மதுவரித் திணைக்களம் 141.5 பில்லியன் ரூபாய் வரி வருவாயை ஈட்டியுள்ளதாக மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2026ஆம் ஆண்டிற்காக அரசாங்கம் நிர்ணயித்துள்ள மொத்த 245 பில்லியன் ரூபாய் வருவாய் இலக்கில், முதல் ஆறு மாதங்களுக்கான இலக்கு 119.3 பில்லியன் ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

அதன்படி, நிர்ணயிக்கப்பட்ட இலக்குடன் ஒப்பிடுகையில் 118.6 சதவீத வருவாய் இலக்கை எட்டும் வகையில் திணைக்களம் வருவாய் ஈட்டியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், 2025ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் பதிவான 117.03 பில்லியன் ரூபாய் வருவாயுடன் ஒப்பிடுகையில், 2026ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க வருவாய் அதிகரிப்பு பதிவாகியுள்ளதாக மதுவரி ஆணையாளர் நாயகம் எம்.பி.என்.ஏ.ஹேமரத்ன தெரிவித்துள்ளார்.

அத்துடன், 2025ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் மதுபான உற்பத்திக்காக 17.25 மில்லியன் லீற்றர் நிர்ப்பூரண மதுசாரம் பயன்படுத்தப்பட்ட நிலையில், 2026ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் அது 19.6 மில்லியன் லீற்றராக அதிகரித்துள்ளதாகவும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

மதுபானப் பயன்பாட்டைக் குறைக்கும் நோக்கில் அரசாங்கம் அவ்வப்போது மதுபான விலைகளை அதிகரித்திருந்த போதிலும், பல்வேறு நிர்வாக மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகள் மூலம் மதுவரி வருவாயை அதிகரிக்கவும் பாதுகாக்கவும் முடிந்துள்ளதாக மதுவரி ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (நி)

## இலங்கைக்கு 200 மில்லியன் டொலர் உதவி ஆசிய அபிவிருத்தி வங்கி தீர்மானம்




(கொழும்பு)

மத்திய கிழக்கு மோதல் காரணமாக உலகப் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள தாக்கங்களுக்கு மத்தியில், இலங்கையின் பொருளாதார ஸ்திரத்தன்மையை வலுப்படுத்துவதற்காக 200 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியை வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி தீர்மானித்துள்ளது.

இந்த நிதியுதவி, இலங்கையின் வர்த்தகம், முதலீடு மற்றும் கைத்தொழில் அபிவிருத்தியை இலக்காகக் கொண்ட கொள்கைக் கடன் திட்டத்தின் கீழ் வழங்கப்படவுள்ளது.

அதில் 100 மில்லியன் அமெரிக்க டொலர், மத்திய கிழக்கு நெருக்கடியினால் நாட்டிற்கு ஏற்பட்டுள்ள பொருளாதார அழுத்தத்தைக் குறைப்பதற்கான மேலதிக நிதியுதவியாக ஒதுக்கப்பட்டுள்ளது.

தொலைதூர மோதல் ஒன்றின் தாக்கம் காரணமாக எந்தவொரு குடும்பமும் மேலும் வறுமைக்குள் தள்ளப்படக் கூடாது என ஆசிய அபிவிருத்தி வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும், இலங்கையில் வேலைவாய்ப்புகளை விரிவாக்குதல், புதிய முதலீடுகளை ஈர்த்தல் மற்றும் வர்த்தகத்தை ஊக்குவித்தல் என்பன இத்திட்டத்தின் பிரதான நோக்கங்களில் அடங்குவதாக அவ்வங்கி குறிப்பிட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் வர்த்தக அமைப்புகளை நவீனமயமாக்குதல், சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில் துறைகளின் போட்டித் தன்மையை உயர்த்துதல், பொருளாதார வலயங்களுக்கு முதலீடுகளைக் கொண்டுவருதல் மற்றும் ஏற்றுமதியை அதிகரித்தல் ஆகியவற்றுக்காகப் பல சீர்திருத்தங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

இச்சீர்திருத்தங்கள் ஊடாக, எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பாரிய பொருளாதார அதிர்ச்சிகளுக்கு இலங்கையின் பொருளாதாரம் சிறப்பாக முகங்கொடுக்கும் திறன் வலுவடையும் என ஆசிய அபிவிருத்தி வங்கி சுட்டிக்காட்டியுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூஜித, ஹேமசிறி...

ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்களைத் தடுக்கத் தவறியதாகவும் முன்கூட்டியே கிடைத்த உளவுத்துறை தகவல்களைப் பொருட்படுத்தாமல் கடமையை மீறியதாகவும் குற்றஞ்சாட்டி, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர ஆகியோருக்கு எதிராக 855 குற்றச்சாட்டுகளைக் கொண்ட குற்றப்பத்திரிகையை சட்டமா அதிபர் கொழும்பு உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு நேற்று (31) பிரியந்த லியனகே, விராஜ் வீரசூரிய மற்றும் திலகரத்ன பண்டார ஆகிய நீதியரசர்கள் மூவரடங்கிய உயர் நீதிமன்ற அமர்வு முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, நீதியரசர்கள் பிரியந்த லியனகே மற்றும் திலகரத்ன பண்டார ஆகியோர் பெரும்பான்மை தீர்ப்பை அறிவித்தனர். அதில் சட்டமா அதிபர் தரப்பினால் ஹேமசிறி பெர்னாண்டோவுக்கு எதிராக முன்வைக்கப்பட்டிருந்த 855 குற்றச்சாட்டுகளில் 854 குற்றச்சாட்டுகளில் அவர் குற்றவாளி எனத் தீர்மானிக்கப்பட்டது.

தீர்ப்பை அறிவித்த நீதியரசர்கள், ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் இடம்பெறுவதற்கு முன்னைய தினம் மாலை, அரச புலனாய்வு சேவையின் அப்போதைய பணிப்பாளர் நிலந்த ஜயவர்தன, மறுநாள் இடம்பெறவிருந்த தாக்குதல் தொடர்பான தகவல்களை ஹேமசிறி பெர்னாண்டோவுக்கு அறிவித்திருந்ததாகத் தெரிவித்தனர்.

அந்தத் தகவல்களைப் பெற்றிருந்த போதிலும் பாதுகாப்புச் செயலாளர் என்ற வகையில் தாக்குதலைத் தடுப்பதற்கான எந்தவொரு பயனுள்ள நடவடிக்கையையும் அவர் மேற்கொள்ளவில்லை என நீதிமன்றம் குறிப்பிட்டது.

மேலும் புலனாய்வு அதிகாரிகளின் கூட்டமொன்றைக் கூட்டி தேவையான நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடியிருக்க முடியும் என்றும் முப்படையினருடன் இணைந்து தாக்குதலைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வாய்ப்பும் அவருக்கு இருந்ததாகவும் நீதியரசர்கள் சுட்டிக்காட்டினர்.


எனினும் அவ்வாறான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை எனக் குறிப்பிட்ட நீதிமன்றம், தாக்குதல் காரணமாக உயிரிழப்புகள் ஏற்படக்கூடும் என்பதை அறிந்திருந்தும் அதனைத் தடுப்பதற்கான கடமையை நிறைவேற்றத் தவறியதாகத் தெரிவித்தது.

இதன் அடிப்படையில், தனது அரச கடமையை நிறைவேற்றத் தவறியமை மற்றும் கொலைக்கு உதவி, ஊக்கமளித்தமை தொடர்பான குற்றச்சாட்டுகளில் ஹேமசிறி பெர்னாண்டோ குற்றவாளி என நீதியரசர்கள் தீர்மானித்தனர்.

இதேவேளை நீதியரசர் விராஜ் வீரசூரிய தனது தீர்ப்பை அறிவித்தபோது, ஹேமசிறி பெர்னாண் டோவுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட வகையில் நிரூபிக்கப்படவில்லை எனத் தெரிவித்தார்.

அதன்படி, அவரை அனைத்து குற்றச்சாட்டுகளிலிருந்தும் விடுதலை செய்ய வேண்டும் என நீதியரசர் விராஜ் வீரசூரிய குறிப்பிட்டார். எனினும் மூவரடங்கிய நீதியரசர்கள் குழுவின் தீர்ப்பின் அடிப்படையில், முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோவுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.(ம-7)

## யாழில் ஊடகவியலாளர்களை ஊக்குவிக்கும் நிகழ்ச்சித் திட்டம்



ஊடகவியலாளர்களை ஊக்குவிக்கும் நிகழ்ச்சித் திட்டம் நேற்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாண மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் மாவட்ட அரச அதிபர் ம.பிரதீபன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக வெகுசன ஊடகப் பிரதி அமைச்சர் கலாநிதி கௌசல்ய ஆரியரத்ன மற்றும் அரசாங்கத் தகவல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் ஜே.பண்டார ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது யாழ்.மாவட்ட ஊடகவியலாளர்கள் எதிர் நோக்குகின்ற சவால்கள் தொடர்பில் பிரதி அமைச்சர் கேட்டறிந்திருந்தார்.

இதன்போது கடந்த காலத்தில் கொலை செய்யப்பட்ட மற்றும் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்களுக்கான நீதி உடனடியாக கிடைக்க வேண்டும் என யாழ்.மாவட்ட ஊடகவியலாளர்கள் வலியுறுத்தியிருந்தனர். (ம-7,30,33)

## மீண்டும் புறக்கணிக்கப்பட்ட ஷமி



இந்திய கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் முகமது ஷமி, தேசிய அணிக்குத் திரும்பும் வாய்ப்பு மேலும் சிக்கலாகியுள்ளதாக தெரிகிறது.

சர்வதேச ரி-20 போட்டியில் 2025 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இங்கிலாந்துக்கு எதிராக கடைசியாக களமிறங்கிய அவர், டெஸ்ட் கிரிக்கெட்டில் விளையாடி ஏறத்தாழ மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டது.

நீண்டகால காயத்திலிருந்து மீண்டு, உள்நாட்டு கிரிக்கெட்டில் சிறப்பாக செயற்பட்ட போதிலும், ஷமியால் மீண்டும் இந்திய அணியில் இடத்தை பெற முடியவில்லை.

ஆகஸ்ட் 15ஆம் திகதி தொடங்கும் இலங்கைக்கு எதிரான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடருக்கான இந்திய அணியிலும் அவரது பெயர் இடம்பெறவில்லை. (நி)




**மதுசன்**




**ரகுதாஸ்**




**கலா**




**வசிகரன்**




**சசிரேகா**




**தனுசியா**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும்

## அரசிடம் மகிந்த தேசப்பிரிய கோரிக்கை விடுப்பு

(கொழும்பு)

**இலங்கையில் மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய அரசிடம் வலியுறுத்தியுள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மக்கள் பிரதிநிதித்துவம் இன்றி மாகாண சபைகள் சிறந்த முறையில் இயங்குவதாக சிலர் வாதிட்டாலும், அது யதார்த்தமானது அல்ல. அரச அதிகாரிகள் நிர்வாகத்தை மேற்கொள்ளும்போது அவர்களுக்கு மக்களுக்கு நேரடியாக பொறுப்பு கூற வேண்டிய அவசியம் ஏற்படுவதில்லை என்பதால், மாகாண சபைகளுக்கு நேரடியான மக்கள் பிரதி நிதிகள் நியமிக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

மக்களின் பிரதிநிதித்துவம் இன்றி மாகாண சபைகள் இயங்குவது ஒரு குற்றமாகும். மாகாண சபை தேர்தலை நடத்தாமல் காலம் தாழ்த்தினால், எதிர்காலத்தில் பாராளுமன்றம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் என அனைத்து நிறுவனங்களையும் மக்கள் பிரதிநிதிகள் இன்றி இயக்க முடியும் என்ற ஆபத்தான நிலையை அது உருவாக்கும்.

எதிர்வரும் செப்ரெம்பர் 15 ஆம் திகதி உலக ஜனநாயக தினம் அனுஷ்டிக்கப்படவுள்ள நிலையில், அன்றைய தினமாவது அரசு மாகாண சபைத் தேர்தலை எப்போது, எந்த முறையில் நடத்தப் போகின்றது என்பதை உத்தியோகபூர்வமாக அறிவிக்க வேண்டும். (நி)

# பிறரின் பயணப் பைகளை எடுத்துச் செல்ல வேண்டாம்

## சுங்கத் திணைக்களம் பொதுமக்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

வானூர்தி பயணம் உள்ளிட்ட எந்தவொரு பயணத்தின் போதும், பிறருக்குச் சொந்தமான பொதிகள் அல்லது பயணப் பைகளை பெற்றுச் செல்வதைத் தவிர்க்குமாறு இலங்கை சுங்கத் திணைக்களம், வானூர்தி நிலைய பயணிகள் மற்றும் பொது மக்களிடம் விசேட கோரிக்கை விடுத்துள்ளது.

பயணிகளுக்குத் தெரியாமலேயே போதைப்பொருட்கள் உள்ளிட்ட சட்டவிரோதப் பொருட்களைக் கடத்துவதற்காக சில குற்றக் குழுக்கள் அவர்களை பயன்படுத்தும் அபாயம் நிலவுவதால் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சுங்கத் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் சந்தன புஞ்சிஹேவா கருத்துத் தெரிவிக்கையில், தாம் எடுத்துச் செல்லும் பொருள் என்ன என்பது கூட தெரியாமல் பொதுமக்கள் கடுமையான குற்றச் செயல்களில் சிக்கிக் கொள்ளும் அபாயம் இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

மிக நெருங்கிய உறவினர்கள் மற்றும் நண்பர்கள் கூட அறியாமலேயே போதைப் பொருள் கடத்தல் குழுக்களால் பயன்படுத்தப்படுவதாகவும், அண்மையில் 19 வயதுடைய இளைஞர் ஒருவரின் பெயரில் பெருந்தொகையான போதைப் பொருளை நாட்டுக்குள் கொண்டு வர முயற்சிக்கப்பட்ட சம்பவமும் பதிவாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் பயணப் பையை தாமே பரிசோதித்தாலும் எளிதில் கண்டறிய முடியாத வகையில் போதைப் பொருட்களை மறைத்து வைக்கும் நுட்பங்களை கடத்தல்காரர்கள் பயன்படுத்துவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், இலவச வானூர்தி பயணச் சீட்டை வழங்கி வெளிநாடு செல்ல ஏற்பாடு செய்வதாக யாரேனும் முன் வந்தால், அதன் பின்னணியில் உள்ள உண்மையான நோக்கம் குறித்து மிகுந்த அவதானத்துடன் சிந்திக்குமாறும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

உலகின் பல நாடுகளில் போதைப்பொருள் கடத்தல் குற்றங்களுக்கு மரண தண்டனை உள்ளிட்ட கடுமையான தண்டனைகள் விதிக்கப்படுவதால், எந்தச் சூழலிலும் தமக்குச் சொந்தமில்லாத பொதிகள் அல்லது பொருட்களை எடுத்துச் செல்ல சம்மதிக்க வேண்டாம் என இலங்கை சுங்கத் திணைக்களம் மேலும் வலியுறுத்தியுள்ளது. (நி)


# சைவ வித்தியா விருத்திச் சங்கம் ஆண்டுப் பொதுக்கூட்டம்

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் **16.08.2026** அன்று காலை **10.00** மணியளவில் நடைபெறும். யாப்பிற்கமைய தகுதியுடைய உறுப்பினர்கள் மாத்திரமே கலந்து கொள்ள உரித்துடையவராவர். உறுப்புரிமை குறித்து உறுதிப்படுத்தல்களுக்கு அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

பொதுக்கூட்டத்தில் சமர்ப்பிக்க வேண்டிய பிரேரணைகள் **07.08.2026** வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

**செயலாளர்,**
**சைவ வித்தியா விருத்திச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி.**

(C-6142)

# INVITATION FOR BIDS 2026/05

## Puthukkudiyiruppu Pradeshiya Sabha

1. The **Chairman, Divisional Procurement Committee** on behalf of the **Chairman, Puthukkudiyiruppu Pradeshiya Sabha, Paranthan Road, Puthukkudiyiruppu** invites sealed bids from eligible and qualified bidders for the works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through **National Competitive Bidding.**
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field and grade mentioned in the table below.

   **"Bidders shall also register themselves with the Registrar of Public Contracts Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987 for the contracts exceed Rs.5 million," Relevant document should be submitted.**
4. Qualification' requirements are indicated in section 4 of the Procurement Document. Additional details are provided in the Section 5 of the Procurement Document.
5. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the bidding documents at the same place on any working days from during the document issuing period mentioned in table below between 09:00 hrs and 15:00 hrs.

| | | Document Issuing/Purchasing Period | | | From 01/08/2026 until 17/08/2026 | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Pre-Bid Conference | | | At 10.30 A.M on 10/08/2026 | | | | | |
| | | Closing and Opening of Bids | | | At 10.30 A.M on 18/08/2026 | | | | | |
| S/No | Bid ID | Description of Work | Source of Fund | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Required CIDA Grade & Speciality | Non-Refundable Fee (Rs.) | Bid Validity Period upto | Required Bid Security Amount (Rs.) | Required Bid Security Validity Period |
| 01 | TOURISM/NP/MU/PTKPS/2026/02 | Establishment of Activities at Kanniyarkulam Area | Tourism | 4.12 | 84 | C8,C7 & C6 (Building) | 2,000.00 | 05/10/2026 | 60,000.00 | 02/11/2026 |
| 02 | TOURISM/NP/MU/PTKPS/2026/03 | Beautification of Katsilaimadu Memorial Place | Tourism | 2.94 | 77 | C9,C8 & C7 (Building) | 2,000.00 | 05/10/2026 | 40,000 | 02/11/2026 |

6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Chairman, Puthukkudiyiruppu Pradeshiya Sabha, Paranthan Road, Puthukkudiyiruppu (T.P:0212291024, email: pkips@gmail.com)** from **9:00** hrs to **15:00** hrs. on any working days during the period stated in table above upon payment of non-refundable fees as mentioned in the table. The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) must be delivered to the **Chairman, Divisional Procurement Committee, Puthukkudiyiruppu Pradeshiya Sabha, Paranthan Road, Puthukkudiyiruppu** on or before **10.30 A.M** as stated in table above. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend at Puthukkudiyiruppu Pradeshiya Sabha, Paranthan Road, Puthukkudiyiruppu.
8. Pre-Bid **Conference will be held at Conference Hall, Puthukkudiyiruppu Pradeshiya Sabha, Paranthan Road, Puthukkudiyiruppu** commencing at **10.30 A.M** as stated in table above.
9. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Tables.

**Chairman,**
**Divisional Procurement Committee,**
**Puthukkudiyiruppu Pradeshiya Sabha.**
**01.08.2026**

(C-6145)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூர் சைவத்தமிழ் பண்பாட்டு கலைக்கூடல் நடத்தும்

## வடக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான

# விவாதச் சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தப் பெருமானின் வருடாந்த பெருந் திருவிழாவை முன்னிட்டு நல்லூர் சைவத்தமிழ் பண்பாட்டுக் கலைக்கூடல் நடாத்தும் வடக்கு மாகாண பாட சாலைகளுக்கிடையிலான விவாதச் சுற்றுப் போட்டி இம் மாத முற்பகுதியில் நடைபெறும்.

இப்போட்டியில் முதன்மை பெறும் இரு அணிகளும் பூங்காவனத் திருவிழாவன்று (11.09.2026) நடைபெறவுள்ள பரிசளிப்பு விழாவில் காட்சி விவாதம் ஒன்றில் பங்குபற்றுவார்கள்.


போட்டி விதிமுறைகள்: ஒரு அணியில் ஐவர் இடம்பெற வேண்டும், போட்டியில் மூவர் பங்குபற்றுவர். இருவர் காத்திருப்பு பட்டியலில் இருப்பர், போட்டிகளுக்கான தலைப்புக்கள் முன்னரே வழங்கப்படும். ஆனால் போட்டி தினத்தன்று வழங்கப்பட்ட தலைப்புக்களில் ஒன்று நடுவர்களால் முடிவு செய்யப்பட்டு வழங்கப்படும். அரையிறுதி மற்றும் இறுதிச் சுற்றுக்கான தலைப்புக்கள் உடன் வழங்கப்பட்டுத் தயார்ப்படுத்தலுக்காக 15 நிமிடங்கள் வழங்கப்படும்.

போட்டிக்கான விண்ணப்பங்கள் உரிய வகையில் நிறைவு செய்யப்பட்டு அதிபரின் உறுதிப்படுத்தலுடன் எதிர்வரும் 7 ஆம் திகதிக்கு முன்னதாக தலைவர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக்கூடல் இல.331, கோவில் வீதி நல்லூர் எனும் முகவரிக்கு தபால் மூலமாக அனுப்பி வைக்குமாறு இணைச் செயலாளர் அறிவித்துள்ளார். (8)



சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஞானச்சுடர் ஆடி மாத 343 ஆவது மலர் வெளியீட்டு நிகழ்வு நேற்றையதினம் சந்நிதியான் ஆச்சிரமத்தில் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நடைபெற்றது. (படம்: மகாலிங்கம்)

## கச்சாய் கெற்பேலி ஆனையிறவு வீதி புனரமைப்பு பணிகள் ஆரம்பம்



(கருமபுரம்)

போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் இரண்டாவது ஒருங்கிணைந்த வீதி அபிவிருத்தி முதலீட்டுத் திட்டத்தின் மூலம் பச்சிலைப்பள்ளி மற்றும் தென்மராட்சி பிரதேச செயலகத்தை உள்ளடக்கிய கச்சாய்-கெற்பேலி-ஆனையிறவு 10.28 கிலோ மீற்றர் நீளமான வீதி புனரமைப்பதற்கான ஆரம்ப நிகழ்வு நேற்றைய தினம் கிளிநொச்சி கிளாலி சந்தியில் நடைபெற்றது.

போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி பிரதியமைச்சர் வைத்தியர் பிரசன்ன குணசேன கலந்து கொண்டு வீதி புனரமைப்பு பணிகளை ஆரம்பித்து வைத்தார்.

குறித்த நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், பாராளுமன்ற உறுப்பினர் கருணநாதன் இளங்குமரன், வீதி அபிவிருத்தி அதிகார சபை தலைவர் தர்மலிங்கம் பாஸ்கரன், பச்சிலைப்பள்ளி மற்றும் தென்மராட்சி பிரதேச செயலாளர்கள், வீதி அபிவிருத்தி அதிகார சபை உத்தியோகத்தர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், ஒப்பந்தகாரர்கள், பிரதேச மக்கள் என பலர் கலந்து கொண்டனர். (8-316)

## வல்வெட்டித்துறை இரத்ததான சங்கத்தின் 87 ஆவது இரத்ததான முகாம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கியில் நிலவும் குருதிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் நோக்கில் வல்வெட்டித்துறை இரத்ததான சங்கத்தின் 87 ஆவது இரத்த தான முகாம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு வல்வெட்டித்துறை நெடியகாடு கணபதி மஹால் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கம் மற்றும் இரத்ததான சங்கம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்நிகழ்வில் குருதிக் கொடையாளர்கள் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்குமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

மேலதிக விபரங்களுக்கு 077 991 1131 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம். (8)

## அலங்கார உற்சவம்

(சிறுப்பிட்டி)

யாழ்ப்பாணம் சிறுப்பிட்டி கிழக்கு அருள்மிகு சிவபூதவராயர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை விசேட அபிஷேகத்துடன் ஆரம்பமாகி 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை உத்தராட நட்சத்திரத்துடன் நிறைவு பெறும்.

தினமும் காலை 9.30 மணிக்கு அபிஷேகம் ஆரம்பமாகும். தொடர்ந்து வசந்த மண்டப் பூஜை இடம்பெற்று சுவாமி வீதி வலம் வருவார்.

25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு சங்காபிஷேகம் ஆரம்பமாகும். தொடர்ந்து மாலை 7 மணிக்கு வசந்த மண்ட பூஜை இடம் பெற்று சுவாமி முத்துச் சப்பறத்தில் வீதி வலம் வருவார். (8)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு 077 163 8756 அல்லது 076 194 0170 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (8)



பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வடக்கு வலய பதிவறை நேற்று முன்தினம் வவுனியா மாவட்டம் A9 வீதி கனகராயன்குளம் - மன்னகுளம் பகுதியில் பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பேராசிரியர் ஏ.எச்.எம்.எச். அபயரத்னவால் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. (படம்:வசந்தரூபன்)



பண்டத்தரிப்பு மறுமலர்ச்சி மன்ற முன்பள்ளியின் மழலையர் விளையாட்டு விழா அண்மையில் இடம்பெற்றது.

## சாவகச்சேரி முத்துமாரி அம்மன் ஆலயத்தில்

## 'மாலைக்கு வாதாடியமைந்தன்' காத்தவராயன் கூத்து இன்று

(சாவகச்சேரி)

தென்மராட்சி- சாவகச்சேரி நகர் வாரிவனம் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய மகோற்சவத்தின் நான்காம் திருவிழா இன்று சனிக்கிழமை இரவு "மாலைக்கு வாதாடிய மைந்தன்" எனும் தொனிப் பொருளில் காத்தவராயன் சிந்து நடைக்கூத்து நிகழ்வு இடம் பெறவுள்ளது.

மாவையூர் யோகதாசன், மயிலையூர் சுரேந்திரன் ஆகியோரின் நெறியாள்கையில் நாதவளை ஞான பைரவர் நாடக மன்றத்தினரால் மேற்படி நாடக நிகழ்வு முன்னெடுக்கப்படவிருப்பதாகவும் இதில் கிராம மக்களை கலந்து கொள்ளுமாறும் ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (8-30)

# டெங்கு உயிரிழப்பு 62 ஆக அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையில் இந்த ஆண்டு டெங்குவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 62 ஆக உயர்ந்துள்ளது.


நாடு முழுவதும் இதுவரை 84,724 பேரை டெங்கு நோய் பாதித்துள்ளமையானது அதன் தீவிரத்தை உணர்த்தி நிற்கின்றது. ... களைத் தொடர்ந்து, ஜூலை மாதத்தில் மட்டும் 29,350 புதிய பாதிப்புகள் பதிவாகின.

இது 2026 ஆம் ஆண்டில் இதுவரை பதிவான மிக அதிகபட்ச மாதாந்திர எண்ணிக்கையாகும்.

தொற்றுப் பரவலில் கம்பஹா மற்றும் கொழும்பு மாவட்டங்கள் தொடர்ந்து முன்னிலையில் உள்ளன.

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு போன்ற சிறிய மாவட்டங்களில் ஒப்பீட்டளவில் குறைவான பாதிப்புகளே பதிவாகியுள்ளன.

ஆனால் நாடு முழுவதும் நோய்ப் பரவல் அபாயம் நீடிப்பதாக சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கின்றனர். (நி)



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127

## கட்டைவேலி -நெல்லியடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் -கரவெட்டி

பதிவு இல:- J/1553 பதிவுத் திகதி:- 16.02.1971

### ஆட்டோ விற்பனைக்கு

எமது சங்கத்திற்கு சொந்தமான இயங்கு நிலையில் உள்ள Bajaj - 2sk, NP GB -9157 இலக்கமுடைய ஆட்டோ எதிர்வரும் 08.08.2026 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு நெல்லியடி பிரதான வீதியில் உள்ள எமது தலைமை காரியாலய வளாகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

கொள்வனவு செய்து கொள்ள விரும்புவோர் ஆட்டோவினை பார்வையிட்டு மீளப்பெறக்கூடிய வைப்பாக ரூபா 1000.00 உம், மீளப்பெற முடியாத வைப்பாக ரூபா 500.00 உம் காசாக செலுத்தி 08.08.2026 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு முன்னதாக பதிவு செய்து கொள்ளவேண்டும். பதிவு செய்து கொண்டவர்கள் மட்டுமே ஏல விற்பனையில் கலந்து கொள்ள முடியும். வெற்றிபெறும் ஏலதாரர் ஏலத்தொகையினை முழுமையாக செலுத்தி அன்றைய தினமே வாகனத்தினை பெற்றுக் கொள்ள வேண்டும். (C-6140)

021 226 3263
01.08.2026

தலைவர்,
கட்.நெல்.ப.நோ.கூ.சங்கம், கரவெட்டி.

## சிறுவர் இல்லங்கள்

## சைவ வித்தியா விருத்திச் சங்கம்

### உடனடி வேலை வாய்ப்பு பெண் (பகுதிநேரம்/ முழுநேரம்)

**உபவிடுதிக்காப்பாளர் -**

எமது சங்க நிர்வாகத்தின் கீழ் உள்ள சைவச்சிறுவர் இல்லங்களிற்கு (பெண்கள்) உபவிடுதிக்காப்பாளர்கள் பணிக்காகத் தகுதியுள்ள அனுபவம் வாய்ந்த விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**நிபந்தனைகள்/ அனுகூலங்கள்**

- வயதெல்லை 25 - 55
- கல்வித்தகைமை: க.பொ.த சாதாரண தரத்தில் கணிதம் உட்பட 6 பாடங்கள் சித்தியுடன் அல்லது அதற்கு மேற்பட்டது.
- தங்குமிடம், உணவு வழங்கப்படும்.
- இல்லத்தில் தங்கியிருந்து பணியாற்றுபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- வாரத்தில் ஒரு நாள் விடுமுறை கிடைக்கும்.
- துறைசார் கல்வி/ அனுபவம் உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

சுய விபரக்கோவையினை 10.08.2026 இற்கு முன்பதாக தபாலிலோ அல்லது நேரிலோ சமர்ப்பிக்கவும்.

(C-6141)

செயலாளர்,
சைவ வித்தியா விருத்திச்சங்கம்,
கலாசாலை வீதி, திருநெல்வேலி,யாழ்ப்பாணம்.

021 222 6525,
076 300 4877

## மனம் நிறைந்த வாழ்த்துக்கள்



**லயன்ஸ் கழகங்களின் புதிய மாவட்ட ஆளுநர்**

**தி. உதயசூரியன்** MJF, JP

அவர்களுக்கு வாழ்த்துக்கள்

சர்வதேச லயன்ஸ் கழகங்கள் - இலங்கை மாவட்டம் D12 (வடக்கு மாகாணம்) 2026/2027 ஆண்டிற்கான மாவட்ட ஆளுநராக பதவியேற்ற வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தின் சிரேஷ்ட உறுப்பினரும், நீண்டகாலமாக அர்ப்பணிப்புடன் மக்கள் சேவையில் ஈடுபட்டு வரும் தி.உதயசூரியன் அவர்கள் எங்கள் தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரியம்மன் தேவஸ்தான பரிபாலன சபையின் உப செயலாளராக இருந்து சிறப்பாக செயலாற்றுபவர். அவருக்கு இத்தகைய உயரிய பதவி கிடைத்தமை எமக்கு பெருமகிழ்ச்சியைத் தருகிறது.

அவரது பொதுப்பணிகள் மேன்மேலும் சிறக்க வாழ்த்துகின்றோம்.

(8169)

வாழ்த்துவோர் -
தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரியம்மன் தேவஸ்தான பரிபாலன சபையினர்.

## 211 வது ஆண்டில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

### (01.08.1816 - 01.08.2026)

## பழைய மாணவர் சங்கத்தின் (தாய்ச்சங்கம்) நிறுவுனர் தின வாழ்த்து

பழைய மாணவனது புதிய தலைமைத்துவத்தோடு, 211 ஆவது ஆண்டில் கால்பதிக்கும், வடபுல கல்வி மற்றும் விளையாட்டுத் துறை வரலாற்றின் முன்னோடியான யாழ்ப்பாணம் மத்திய கல்லூரித் தாய்க்கு மனப்பூர்வமான வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்வதில் பிள்ளைகளாக மகிழ்வடைகிறோம்.

இந்த சந்தர்ப்பத்தில், நிறுவுனர் வண. ஜேம்ஸ் லிஞ் அவர்களையும், கடந்த 210 ஆண்டுகளாக கல்லூரிப் பாரம்பரியத்தை கட்டிக்காத்து கல்லூரியின் வளர்ச்சிக்கு பல்வேறு வழிகளிலும் அர்ப்பணிப்போடு சேவையாற்றிய அதிபர்கள், ஆசிரியர்கள், துணை ஆளணியினர், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் நன்றியோடு நினைவிற்கொள்கிறோம்.

"மத்தியின் மணிக்கொடி நித்தியம் நிலைக்கும்"

(C-6144)

பழைய மாணவர் சங்கம் (தாய்ச்சங்கம்)
சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம்

## பொது அறிவித்தல்

## வலிகாமம் வடக்கு பிரதேச சபை காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)

**கீரிமலையில் ஆடி அமாவாசை தினத்தன்று (12.08.2026) தற்காலிக வியாபார நிலையங்கள் அமைப்பதற்கான இடங்களை ஏலத்தில் வழங்கல் மற்றும் பிதிர்கடன் கிரியைகள் மேற்கொள்ளும் சிவாச்சாரியார்களை பதிவு செய்தல்**

**1. தற்காலிக வியாபார நிலையங்கள் அமைப்பதற்கான இடங்களை ஏலத்தில் வழங்கல்**

கீரிமலையில் ஆடி அமாவாசை தினத்தன்று உற்சவகால தற்காலிக வியாபார நிலையங்கள் அமைப்பதற்கான இடங்களை ஏலத்தில் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. பகிரங்க ஏலத்தில் பங்குபற்ற விரும்புபவர்கள் எதிர்வரும் 06.08.2026 வியாழக்கிழமை **பிற்பகல் 2:00** மணிக்கு முன்னர் தெல்லிப்பளை உப அலுவலகத்தில் ரூபா 200.00 கட்டணம் செலுத்தி விண்ணப்பப் படிவத்தை பெற்றுக்கொள்ளலாம். பகிரங்க ஏலம் **07.08.2026** ஆம் திகதியன்று (வெள்ளிக்கிழமை) **முற்பகல் 9.30** மணிக்கு கீரிமலை பேரூந்து நிலைய முன்றலில் நடைபெறும்.

**குறிப்பு:**

- சித்திபெற்ற கேள்விதாரர்கள் உடனடியாகவே அதற்கான குத்தகைப்பணம் முழுவதையும் செலுத்துவதுடன் வியாபார உரிமத்தினையும் பெற்றுக் கொள்ள வேண்டும்.
- ஆலய சுற்றாடலில் உள்ள நிரந்தரக் கடைகளும், உற்சவ காலத்திற்கு பிரதேச சபையால் வழங்கப்படும் கடைகளும் தவிர வேறு கடைகள் தனியார் காணிகளிலோ அல்லது தனிப்பட்ட இடங்களிலோ சபையின் அனுமதியின்றி வியாபாரம் மேற்கொள்ள முடியாது.
- உணவு கையாளும் நிலையங்கள் சுகாதார வைத்திய அதிகாரியினால் வழங்கப்படும் அனுமதியினைப் பெற்றுக்கொண்ட பின்னரே வியாபாரம் மேற்கொள்ள அனுமதிக்கப்படும்.

**2. பிதிர்கடன் கிரியைகள் மேற்கொள்ளும் சிவாச்சாரியார்கள் பதிவு செய்தல்**

பிதிர்க்கடன் கிரியைகள் மேற்கொள்ளும் சிவாச்சாரியார்கள் **10.08.2026** ஆம் திகதி **மு.ப 9.00** மணி தொடக்கம் **பி.ப 3.00** மணி வரையும் **11.08.2026** திகதி **மு.ப 9.00**மணி தொடக்கம் **பி.ப 3.00** மணி வரையான காலப்பகுதியில் வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் கீரிமலை புனித தீர்த்தக்கரை அலுவலகத்தில் படிவ கட்டணமாக ரூபா 200.00 உம் இடவரி கட்டணமாக ரூபா 3000.00 உம் செலுத்தி தங்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

- பதிவுகள் மேற்கொள்ள வரும் சிவாச்சாரியார்கள் தங்களுக்குரிய பதிவு செய்யப்பட்ட சிவாச்சாரிய அடையாள அட்டை சமர்ப்பிப்பது கட்டாயமானது.
- மேலும் எம்மிடம் பதிவுகள் மேற்கொள்ளாத சிவாச்சாரியார்கள் ஆடி அமாவாசை தினத்தன்று கீரிமலை புனித பிரதேசத்தில் பிதிர்கடன் கிரியைகள் மேற்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

சோ.சுகிர்தன்
தவிசாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை.


(C-6139)

021 224 4180
01.08.2026

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பாரதம்

## பாகிஸ்தான் நிலக்கரி சுரங்கத்தில் வெடி விபத்து!- 32 பேர் உயிரிழப்பு



(இஸ்லாமாபாத்)

தென்மேற்கு பாகிஸ்தானில் உள்ள ஒரு நிலக்கரிச் சுரங்கத்தில் நேற்று முன்தினம் வியாழக் கிழமை ஏற்பட்ட வெடி விபத்தில் சுமார் 32 சுரங்கத் தொழிலா ளர்கள் உயிரிழந்தனர்.

மேலும் இந்த அனர்த்தத்தில், 10 பேர் நிலத்தடியில் சிக்கிக் கொண்டனர்.

மீட்புக் குழுவினர் சம்பவ இட த்தை அடைந்த போது, அவர் களில் பலரின் நிலைமை உயி ருக்கு ஆபத்தானதாக இருந்ததாக அதிகாரிகள் கவலை வெளியிட் டுள்ளனர்.

மீத்தேன் வாயு தேங்கியதே இந்த வெடிப்புக்குக் காரணமாக இருந்ததாகத் தெரிகிறது என்றும், பலுசிஸ்தான் மாகாணத் தலை நகரான குவெட்டாவின் புறநகர்ப் பகுதியில் இந்தச் சம்பவம் நிகழ் ந்ததாகவும் அரசு சுரங்க ஆய்வாளர் கனி பலோச் தெரி வித்தார்.

வெடிப்புச் சம்பவம் நிகழ்ந்து சில மணிநேரங்களுக்குப் பின்னர் ஏழு பேரின் உடல்கள் மீட்கப்பட்ட தாகவும், பின்னர் அவசரக்கால மீட்புக் குழுவினர் மேலும் 25 பேரின் உடல்களைக் கண்டெடுத்ததாகவும் அதிகாரி களும் மாகாண பேரிடர் மேலாண்மை முகமையும் வெளியிட்ட அறிக்கையில் தெரி வித்தன.

இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ள ஏனைய சுரங்கத் தொழிலாளர் களைக் கண்டறிந்து மீட்பதற்கான பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)

## அமெரிக்காவின் அச்சுறு...

# ஹார்முஸ் திறக்க...

## ஈரான் திட்டவட்டம்

டெஹ்ரான் ..........................

**ஹார்முஸ் ஜலசந்தி எங்களது கட்டுப்பாட்டில் உள்ளது அமெரிக்கா தொடர்ந்து அச்சுறுத்தும் வரை அந்த முக்கிய ஜலசந்தியை மீண்டும் திறக்க முடியாது என ஈரானின் இஸ்லாமியப் புரட்சிகரப் பாதுகாப்புப் படை திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.**

மேற்காசிய நாடான ஈரான் மீது அமெரிக்கா தொடர்ந்துள்ள போர், நான்கு மாதங்களை தாண்டியும் தொடர்கிறது. போர் நிறுத்தம், அமைதி ஒப்பந்தம், பேச்சு என பல முயற்சிகள் நடந்தபோதும், இரு தரப்பும் மாறி மாறி தாக்கி வருகின்றன. இந்த போரின் முக்கிய புள்ளியாக விளங்குவது, ஈரான் மற்றும் ஓமனை ஒட்டியுள்ள ஹார்முஸ் ஜலசந்தி. உலக அளவிலான கடல்சார் கச்சா எண்ணெய் போக்குவரத்தில், 20 சதவீதம் இந்த பாதையிலேயே நடக்கிறது.

கடந்த வாரம் முழுவதும் நடந்த தாக்குதலை தொடர்ந்து, ஹார்முஸ் ஜலசந்தி தங்களது கட்டுப்பாட்டில் இருப்பதாக அமெரிக்காவும், ஈரானும் தனித்தனியாக பிரகடனப்படுத்தி உள் ளன. தற்போது அமெரிக்கா தொடர்ந்து அச்சுறுத்தும் வரை ஹார் முஸ் ஜலசந்தியை திறக்க முடி யாது என ஈரான் தெரிவித்துள்ளது. ஈரான் மேலும் தெரிவிக்கையில் ஹார்முஸ் ஜலசந்தி வழியாகக் கப்பல்கள் செல்வ... எங்கள...

அமெ... விற்கு ... தை... டால் ... கப்பட... நிலம்... மீற்ற... அந்நி... தியில்... இறை... ஆக்கி...

## பழம்பெரும் பின்னணி பாடகி ஜமுனா ராணி காலமானார்



(டில்லி)

பழம்பெரும் பின்னணி பாடகி ஜமுனா ராணி தனது 88ஆவது வயதில் காலமானார்.

தமிழ், தெலுங்கு, சிங்களம், கன் னடம், மலையாளம் உள்ளிட்ட பல் வேறு மொழிகளில் 6,000இற்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடியுள்ள அவர், இந்தியத் திரையுலகில் தன க்கென தனி இடத்தைப் பெற்றிருந்தார்.

பல தலைமுறை ரசிகர்களை தனது இனிமையான குரலால் கவர்ந்த ஜமுனா ராணியின் மறைவு, இசை உலகில் பெரும் சோகத்தை ஏற்படு த்தியுள்ளது.அவரது மறைவுக்கு திரை யுலகப் பிரபலங்கள் மற்றும் ரசிகர்கள் இரங்கல் தெரிவித்து வருகின்ற னர். (நி)

## மொரோக்கோ எல்...

## அவசர நிலையை ...

(மாட்ரிட்)

ஆபிரிக்காவின் வடமேற்கு முனையில் அமைந்துள்ள ஸ்பெ யின் ஆளுகைப் பிரதேசமான சியூட்டா பகுதியின் அதிகாரிகள், அங்குள்ள மொரோக்கோ எல்லைப் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்காக தேசிய அவசரநிலையை அறி வித்தனர்.

அத்துடன், எல்லையைப் பாது காக்க இராணுவத்தை அனுப்புமாறு நேற்று முன்தினம் வியாழக் கிழமை மாட்ரிட் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மொரோக்கோ மற்றும் ஸ்பெ யின் பிரதேசங்களைப் பிரிக்கும் கடல்தடுப்புச் சுவர்களைச் சுற்றி நடந்து செல்லவும், எல்லை வேலியை ஏறிக்கடக்கவும் மக்கள் கூட்டம் முயற்சிக்கும் காட்சிகள் காணொளிகளில் வெளியாகியுள்ள நிலையில் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, ஸ்பெயின் பிரதமர் பெட்ரோசான்செஸ் நிலை மையை சமாளிக்க “உடனடி



நடவடிக்கை ... உறுதியளித்து...

அதேநேரம்... காப்புப் படை... ளிப்பதற்காக, ... படைகளை ... களைச் சியூட்... ளதாக ஸ்பெ... அமைச்சு நேற்... முக்கிழமை ... வித்தது.

வட ஆபிரி...

## ஐரோப்பாவில் தீவிரமடையும் காட்டுத்தீ



(பாரிஸ்)

ஸ்பெயின் நாட்டில் கடும் வெப்ப அலைமற்றும் பலத்த காற்று வீசி வரு வதால், காட்டுத்தீ மீண்டும் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதுடன், அடுத்த 3 நாட்கள் மிகவும் சிக்கலான சூழ் நிலையை எதிர் கொள்ள வேண்டியிரு க்கும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பிரான்ஸின் போர்டோ பிராந்தியத்தில் வெப்பநிலை 40 டிகிரி செல்சியஸை நெருங்கி வரும் நிலை யிலும், பலத்த சூறாவளிக் காற்று வீசி வருவதாலும் லான்டன் பகுதி காட்டுத்தீ மீண்டும் கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியுள்ளது.

இது 1949-ஆம் ஆண்டிற்குப் பிறகு பிரான்ஸ் சந்திக்கும் மிக மோசமான காட்டுத்தீ அசம்பாவிதமாகக் கருதப்படு கிறது.

காட்டுத்தீயைக் கட்டுப்படுத்த இரா ணுவ வீரர்களுடன் சேர்ந்து நூற்றுக் கணக்கான தன்னார்வலர்களும் தீவி ரமாக ஈடுபட்டு வருகின்றனர். காட்டுப் பகுதியைச் சுற்றியுள்ள சாலைகளில் நூற்றுக்கணக்கான மீற்றர்களுக்கு நீர் தாங்கிகள்- மற்றும் தீயணைப்பு வாகனங்கள் அணிவகுத்து நிற்கின் றன. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## அச்சுறுத்தல் உள்ள வரை
## றக்கபடமாட்டாது!

டம்

டுப்பாட்டில்
த்தும் வரை
க முடியாது
பாதுகாப்புப்




லேயே
நடந்த
ர்முஸ்
ாட்டில்
ானும்
தி உள்
ரிக்கா
ஹார்
யாது
ஈரான்
ர்முஸ்
ல்கள்

செல்வது தொடர்பான முடிவு எங்களிடமே உள்ளது.

அதேவேளையில், அமெரிக்காவிற்கு உதவும் நாடுகள் தங்கள் நடத்தையைத் திருத்திக் கொள்ளா விட்டால் கடுமையான பதிலடி கொடுக்கப்படும். ஹார்முஸ் ஜலசந்தி எங்கள் நிலம். ஆயிரக்கணக்கான. கிலோமீற்றர் தொலைவிலிருந்து வந்த ஒரு அந்நியர் தலையிட அனுமதியில்லை. சர்வ வல்லமையுள்ள இறைவனின் உதவியுடன், ஆக்கிரமிப்பு செய்தவர் தண்டிக்கப்படுவர்.

அமெரிக்க அதிகாரிகளின் மிகைப்படுத்தல்களும், அச்சுறுத்தல்களும், பிராந்தியத்தில் கடல்வழிப் போக்குவரத்தில் அவர்களின் தலையீடும் தொடரும் வரை ஹார்முஸ் ஜலசந்தியை மீண்டும் திறக்க முடியாது. அச்சுறுத்தல்களும் தலையீடுகளும் நிலைமையை கடினமாகவும் சிக்கலாகவும் மட்டுமே ஆக்கும். இவ்வாறு ஈரானின் இஸ்லாமியப் புரட்சிகரப் பாதுகாப்புப் ப்டை தெரிவித்துள்ளது. (நி)

## நாசா செயற்கைக்கோள் படப்பிடிப்பில்
## சிக்கிய கடற்பாசிப்படலம்



(வோஷிங்டன்)

அட்லாண்டிக் பெருங்கடலில் சுமார் 8,500 கிலோமீற்றர் நீளத்திற்குப் பரவியுள்ள மாபெரும் கடற்பாசிப் படலம் விஞ்ஞானிகளால் கண்டறியப்பட்டுள்ளது.


இந்த கண்டுபிடிப்பு, நாசாவின் செயற்கைக்கோள் படங்களை ஆய்வு செய்ததன் மூலம் வெளிச்சத்திற்கு வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விஞ்ஞானிகளின் தகவலின்படி, வரலாற்றில் பதிவாகியுள்ள கடற்பாசி வளர்ச்சிகளில் இது இரண்டாவது மிகப் பெரிய கடற்பாசிப் படலமாகக் கருதப்படுகிறது.

இந்த கடற்பாசிகள் கடற்கரைகளில் கரை ஒதுங்கும் போது கடுமையான துர்நாற்றத்தை ஏற்படுத்துவதுடன், கடல் வாழ் உயிரினங்கள், கடல்சார் சுற்றுச்சூழல் மற்றும் கடலோரப் பகுதிகளின் சுற்றுச் சூழல் சமநிலைக்கும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும் என சூழலியல் நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும், இந்த கடற்பாசிப் படலத்தின் வளர்ச்சி மற்றும் நகர்வை விஞ்ஞானிகள் தொடர்ந்து கண்காணித்து வருவதுடன், கடலோர நாடுகள் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (நி)

## கோ எல்லையை பலப்படுத்த
## லயை அறிவித்த ஸ்பெயின்




நடவடிக்கை எடுக்கப்படும்" என உறுதியளித்துள்ளார்.

அதேநேரம், எல்லைப் பாதுகாப்புப் படையினருக்கு ஆதரவளிப்பதற்காக, தங்கள் ஆயுதப் படைகளைச் சேர்ந்த பணியாளர்களைச் சியூட்டாவிற்கு அனுப்பவுள்ளதாக ஸ்பெயினின் உள்துறை அமைச்சு நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிற்பகுதியில் .தெரிவித்தது.

வட ஆபிரிக்காவில் அமைந்துள்ள மற்றொரு ஸ்பானியத் தன்னாட்சி நகரமான மெலில்லாவு டன் சேர்த்து, சியூட்டா நகரமும் ஆபிரிக்காவுடனான ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒரே நில எல்லையாகத் திகழ்கிறது.

ஐரோப்பாவை அடைய முற்படும் புலம்பெயர்ந்தோர் எல்லை வழியாக நுழைய முயற்சிக்கும் நிகழ்வுகள், அவ்வப்போது இவ்விரு நகரங்களிலும் அதிகரிக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

## பாகிஸ்தானில் பனிச்சரிவு
## 10 வீரர்கள் மாயம்!



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் உள்ள உலகின் மிக உயர்ந்த மலைகளில் ஒன்றான "பிராட் பீக்" சிகரத்தில் பனிச்சரிவு ஏற்பட்டதைத் தொடர்ந்து, நேபாளத்தைச் சேர்ந்த பிரபல மலையேற்ற வீரர் நிம்ஸ் டாய் தலைமையில் சென்ற சர்வதேச மலையேற்ற வீரர்கள் 10 பேர் காணாமல் போயுள்ளனர். பாகிஸ்தான் பல முக்கிய மலைச்சிகரங்களைக் கொண்டு [illegible] மலைச்சிகரங்க ளில் ஏறுவதற்காக உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் மலையேற்ற வீரர்கள் வந்து செல்கின்றனர்.

வட பாகிஸ்தானின் காரகோரம் மலைத் தொடரில் கடல் மட்டத்திலிருந்து 8,047 மீற்றர் (26,401 அடி) உயரத்தில் "பிராட் பீக்" மலைச்சிகரம் அமைந்துள்ளது. இது உலகின் 12 ஆவது மிக உயரமான மலைச்சிகரமாகும். அங்கு அவ்வப்போது பலத்த மழையும் கடும் பனிப்பொழிவும் நிலவும். இதன் காரணமாக, பனிச்சரிவும் ஏற்படுகிறது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் வியாழனன்று (ஜூலை 30), நேபாள பிரபல மலையேற்ற வீரர் நிம்ஸ் டாய் தலைமையில் சென்ற 10 பேர் அடங்கிய சர்வதேச மலையேற்ற குழு ஒன்று, "பிராட் பீக்" மலைச் சிகரத்தில் மலையேறத் தொடங்கினர்.

இந்தநிலையில், அங்கு நிகழ்ந்த பனிச்சரிவில் சிக்கி மலையேற்ற வீரர்கள் மாயமாகியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

நேபாளத்தை சேர்ந்த "நிம்ஸ் டாய்" என்றும் அழைக்கப்படும் நிர்மல் புர்ஜா, 2019 இல் உலகின் மிக உயர்ந்த 14 சிகரங்களையும் 189 நாட்களில் ஏறி உலக சாதனை படைத்துள்ளார். இவரது மலையேற்ற சாதனைகள் நெட் ஃபிக்ஸில் "14 Peaks: Nothing is Impossible" என்ற பெயரில் ஆவணப்படமாக வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## மகோற்சவம்

(பொலிகண்டி)

பொலிகண்டி மருதாம்புலம் திருவருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 05 ஆம் திகதி புதன்கிழமை காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும்.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 12 ஆம் திகதி புதன்கிழம இரவு 8 மணிக்கு சப்பறத் திருவிழாவும் 13 ஆம் திதகி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு பொலிகண்டி கந்தவன சமுத்திரத்தில் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (8)



சுழிபுரம் தொல்புரம் மேற்கு கே.ஏ.எஸ் சத்தியமனை நூலகம் நான்காவது வருடமாக நடாத்தும் ஓவியப்போட்டி அண்மையில் நடைபெற்றது.நான்கு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு நடைபெற்ற இப்போட்டியில். 40 பாடசாலைகளிலிருந்து சுமார் 300 இற்கு மேற்பட்ட மாணவர்கள் பங்குபற்றி தமது ஓவியத்திறமையை வெளிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (படம் : சிவசாந்தன்)


## கல்யாணமாலை

### சர்வதேச இலவச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு:1991- இந்து
நட்சத்திரம்: பூரம்
கி-பா- 11
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: Bsc,Msc, IT Specialist (Germany)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16441

பிறப்பு:1995- இந்து
நட்சத்திரம்:அத்தம்
உயரம்:5'8"
தகைமை/தொழில்-College, Teacher
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: B/16442

பிறப்பு:1994-RC
உயரம்:5'5"
தகைமை/தொழில்-A/L, Transport (Own)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16443

பிறப்பு: 1986- இந்து
நட்சத்திரம்:ஆயிலியம்
கி-பா-36
2ல்செவ்
உயரம்:5'6"
தகைமை/தொழில்-A/L, லண்டன்
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16447

பிறப்பு: 1996- இந்து
நட்சத்திரம்:சுவாதி
உயரம்:5'8"
தகைமை/தொழில்: Bsc ,Teacher
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: B/16448

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு-2000-இந்து
நட்சத்திரம்-மகம்
12 இல் சூரிசெவ்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BBA
எதிர்பார்ப்பு: அரச/தனியார் தொழில்
தொ.இ: G/16477

பிறப்பு-1999-இந்து
நட்சத்திரம்-கார்த்திகை
1 இல் செவ்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: Bsc (IT),Teacher
எதிர்பார்ப்பு: உயர்பதவி
தொ.இ: G/16480

பிறப்பு-1994-இந்து
நட்சத்திரம்-பூரட்டாதி
உயரம்-5'4"
தகைமை/தொழில்: Diploma,Canada
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண், விவகரத்தானவர்
தொ.இ: G/16481

பிறப்பு-2000-இந்து
நட்சத்திரம்:மிருகசீரிடம்
2 இல் செவ்
கி-பா -9
உயரம்: 5'
தகைமை/தொழில் -BCom, Assistant Accountant
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/16483

பிறப்பு-1995-இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி-பா-45
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: MBBS,Doctor
எதிர்பார்ப்பு: Doctor,Engineer, IT Field
தொ.இ: G/16848

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 631

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



### பசியைத் தூண்டலாம்!

வயிறு பசிக்கிறதே!" என்பது சிலருடைய கவலை. வயிறு பசிக்கவில்லை என்பது சில பேருடைய கவலை.

இரண்டு விதமான கவலைக்கும் வயிறு தான் காரணமாக இருக்கிறது.

வயிறு பசிக்கிறது என்றால் அது இயற்கை . வயிறு பசிக்கவில்லை என்றால் அது வியாதி. ஆனால் பசியையும் நாம் பசிப்பிணி என்று தான் சொல்வோம் . என்ன காரணம்?

வியாதியைப் போக்க வேண்டியது எவ்வளவு முக்கியமோ அதைவிட முக்கியம் பசியைப் போக்க வேண்டியது! ஒரு சமுதாயத்தில் பசிப்பிணியே இருக்கக்கூடாது. அதுதான் நல்ல சமுதாயம் .

பசியைப் போக்க வேண்டும் என்றால் சாப்பாடு போட வேண்டும். பசியின்மையைப் போக்க வேண்டும் என்றால் வைத்தியம் தான் செய்ய வேண்டும் .

இது சம்பந்தமாக எவ்வள்வோ ஆராய்ச்சிகள் நடக்கிறது. நிறைய மருந்தும் கண்டு பிடித்துள்ளார்கள். நம் உடம்பில் பசியைத் தூண்டக்கூடிய பகுதி எது. இதை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும் அல்லவா?

நாம் சாப்பிடுகின்ற ஆகாரம் செரிப்பதற்கு எது காரணம் தெரியுமா? நம் மூளையின் பின் பகுதி தான் அதற்குக் காரணமாக இருக்கிறது.

மூளையின் பின்பகுதியில் நரம்பு செல்களால் ஆன இரண்டு வகையான "ஆரெக்சின் " கள் தான் பசியை உண்டாக்குகிறது என்று கண்டு பிடித்திருக்கிறார்கள். இரண்டு ஆய்வாளர்கள் இதைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். அவர்கள் இரண்டு பேரும் டெக்சாஸ் பல்கலைக்கழகத்தில் ஹோவர்ட் ஹக்ஸ் மருத்துவக்கல்வி நிலையத்தில் பணிபுரிகிறவர்கள்.

உண்பது தேவை என்பது உணரப்படும்போது மூளையின் அந்தக் குறிப்பிட்ட பகுதி "ஆரெக்சின்" என்கிற ஹார்மோன்களைச் சுரக்கும். அது பசி உணர்வை தூண்டும் என்பது தான் அந்த ஆய்வாளர்களின் கண்டுபிடிப்பு .

இந்த "ஆரெக்சின்" வேறு சில உயிர் இனங்களிலும் உண்டு எலிகளிலும் உண்டு. அதனால் எலிகளை வைத்து இது சம்பந்தமான ஆராய்ச்சியை செய்தார்கள்.

எலிகளின் உடம்பில் ஆரெக்சினைச் செலுத்திப் பார்த்தார்கள். உடனே என்ன நடந்தது தெரியுமா? அந்த எலிகள் எல்லாம் பசியால் துடிக்க ஆரம்பித்து விட்டது ! எதையாவது சாப்பிட்டு பசியைத் தீர்த்தால் போதும் என்கின்ற அளவுக்கு அந்த எலிகள் எல்லாம் அல்லாட ஆரம்பித்து விட்டது.

இயல்பாக சாதாரணமாக அந்த எலிகள் எவ்வளவு சாப்பிடுமோ அதைவிட எட்டு முதல் பத்து மடங்கு அதிகமான ஆகாரத்தை ஓர் இரண்டு மணி நேரத்துக்குள் சாப்பிட்டுத் தீர்த்து விட்டது!

சில எலிகளின் மூளையில் இந்த "ஆரெக்சின்" அளவை கட்டுப்படுத்திப் பார்த்திருக்கிறார்கள். உடனே அதில் சாப்பாட்டைக் கண்டால் முகத்தைத் திருப்பிக் கொண்டு போக ஆரம்பித்து விட்டதாம். அந்த எலிகளுக்குப் பசி எடுக்கவில்லையாம்!

இந்த ஆராய்ச்சியின் அடிப்படையில். பசி எடுக்காமல் இருக்கின்ற மனிதர்களுக்கும் பசியைத் தூண்ட முடியும் என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

ஆக "ஆரெக்சின்" தான் பசிக்குக் காரணம் என்பது தெரிந்து விட்டது.

சரி "ஆரெக்சின்" என்றால் என்ன? அது ஒரு கிரேக்கச் சொல். அதற்கு "பசி" என்று அர்த்தம்.

நம்முடைய மனிதர்களுக்கு எல்லாம் பசியைத் தூண்டுவதற்கு மருந்து தேவையில்லை! பசியைக் குறைப்பதற்குத்தான் மருந்து தேவை. ஒரு அம்மா வைத்தியரைத்தேடி வந்தார் .

வைத்தியர்,' என் வீட்டுக்காரருக்கு திடீர் என்று அகோரப்பசி. ஏற்பட்டு விட்டது! நிறைய சமைத்துப் போடுகின்றேன். அவ்வளவையும் சாப்பிட்டு விட்டு கிழே கிடக்கின்ற குப்பைக் கூளங்களையும் எடுத்து சாப்பிட ஆரம்பித்து விட்டார் என்ன வென்று பாருங்கள் என்றார்.

"எவ்வளவு நாளாக இப்படி இருக்கிறது?" என்று கேட்டார் வைத்தியர்.

"ஒரு வாரமாக இப்படி இருக்கிறது!" என்றார்.

"இவ்வளவு நாளாக ஏன் சும்மா இருந்தீர்கள். ஆரம்பத்திலேயே இங்கே அழைத்துக் கொண்டு வர வேண்டியது தானே?" என்றார்

"வீடு முழுவதும் சுத்தமாகட்டும் என்று காத்துக்கொண்டு இருந்தேன் வைத்தியர்!" என்றார் அந்த அம்மா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அஸ்வெசும பயனாளிகளின் பட்டியல் புதுப்பிப்பு 73 வீதம் நிறைவு

## நலன்புரி நன்மைகள் சபை தெரிவிப்பு

(கொழும்பு)

'அஸ்வெசும' பயனாளிகளின் பட்டியலைப் புதுப்பிப்பது தொடர்பான கணக்கெடுப்புப் பணிகளில் 73 சதவீதம் நிறைவடைந்துள்ளதாக நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

கணக்கெடுப்பைத் தொடர்ந்து தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய பயனாளிகளுக்கான கொடுப்பனவுகள் ஒக்டோபர் மாதத்தில் தொடங்கப்படலாம் என்று அதன் தலைவர் நிமல் கோட்டவெலகெதர குறிப்பிட்டுள்ளார். (8)




தென்மராட்சி மீசாலை வடக்கு, "சுடர் ஒளி" முன்பள்ளிச் சிறார்களின் "வேடம் தாங்கல்" (வினோத உடை தரித்தல்) நிகழ்வு முன்பள்ளி வளாகத்தில் அண்மையில் இடம்பெற்றது. (படம்:சுபேசன்)

# போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கை இதுவரை 241,420 பேர் கைது

(கொழும்பு)

முழு நாடுமே ஒன்றாக எனும் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் விசேட தேசிய போதைப்பொருள் ஒழிப்புத் திட்டத்துக்கமைய இதுவரை சுமார் 2 இலட்சத்து 41 ஆயிரத்து 420 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைக்கமைய, 684 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாடு முழுவதும் சுமார் 684 சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்த பொலிஸார் மேற்படி சந்தேக நபர்களை கைது செய்துள்ளனர்.

மேலும் கைதான 4 சந்தேகநபர்களுக்கு எதிராக தடுப்புக்காவல் உத்தரவு பெறப்பட்டுள்ளதுடன், போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ள ஒருவரை மறுவாழ்வு நிலையத்துக்கு அனுப்பி வைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்தோடு கடந்த வருடம் ஒக்டோபர் முதல் முன்னெடுக்கப்பட்டு வரும் தேசிய போதைப்பொருள் ஒழிப்புத் திட்டத்துக்கமைய இதுவரை 2 இலட்சத்து 41 ஆயிரத்து 420 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (8)

## சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார சந்தை விலைகள்

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா | மட்டுவில் ரூபா | வவுனியா ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 300 | 250 | 350 | 250 | 230 |
| உருளைக்கிழங்கு | 200 | -- | 200 | -- | 350 |
| பச்சைமிளகாய் | 1200 | 1300 | 1400 | 1000 | 1200 |
| தக்காளி | 450 | 450 | 400 | 400 | 330 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 200 | 200 | 200 | 140 |
| கோவா | 220 | 200 | 300 | 200 | 180 |
| கரட் | 400 | 350 | 400 | 400 | 335 |
| பூசணி | 200 | 180 | 200 | 150 | 130 |
| புடோல் | 200 | 150 | 200 | 180 | 130 |
| வாழைக்காய் | 140 | 120 | 200 | 120 | 120 |
| சின்ன வெங்காயம் | 250 | 350 | 300 | -- | 280 |
| பெரிய வெங்காயம் | 230 | -- | 240 | -- | -- |
| பாகற்காய் | 400 | 400 | 400 | 400 | 350 |
| வெண்டக்காய் | 200 | 180 | 400 | 200 | 120 |
| கருணைக் கிழங்கு | 400 | 350 | 400 | -- | 350 |
| பயற்றங்காய் | 120 | 150 | 150 | 150 | 130 |
| லீக்ஸ் | 320 | 300 | 300 | 300 | 240 |
| பீற்றூட் | 450 | 350 | 400 | 400 | 400 |
| கறிமிளகாய் | 650 | 500 | 800 | 600 | 650 |
| முருங்கைக்காய் | 250 | 150 | 400 | 250 | 300 |
| போஞ்சி | 500 | 400 | 600 | 500 | 450 |
| தம்புள்ள-கத்தரி | 250 | -- | 300 | -- | -- |
| கீரை – 1 பிடி | 100 | 60 | 100 | -- | 80 |
| தேசிக்காய் | 250 | 250 | 500 | 300 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 140 | 160 | 100-150 | -- | 100 |
| இராசவள்ளி | 450 | 350 | 300 | -- | 300 |
| வெங்காயப்பூ | 200 | -- | 400 | -- | -- |
| முள்ளங்கி | 160 | 180 | 200 | 150 | 100 |
| பொன்னாங்காணி | 100 | -- | 60 | -- | 50 |
| வல்லாரை | 70 | -- | 120 | -- | 50 |
| ஈரப்பலா | 200 | -- | 150 | -- | 70 |

# இராசிபலன்

01.08.2026
ஆடி 16, சனிக்கிழமை
திருதியை முன்னிரவு 10.29 மணிவரை ・ இராகுகாலம் 9.03-10.33 மணிவரை
சதயம் முன்னிரவு 8.55 மணிவரை
சுப நேரம் 3.03-4.33 மணிவரை
சந்திராஷ்டமம்- ஆயிலியம், மகம்

வளவன்

**மேஷம்** நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களைத் தேடி வரலாம், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**ரிஷபம்** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும்.

**மிதுனம்** எதிலும் அவசரத்தை தவிர்ப்பது நல்லது, உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாக பார்ப்பர், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், பெரிய மனிதர்களின் சந்திப்புண்டு.

**கடகம்** மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்கள் தோன்றி மறையும், பிரயாண பயமுண்டு.

**சிம்மம்** புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், கனவுப் பலிதமுண்டு, வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**கன்னி** கூட்டு முயற்சிகள் கைகூடும், எதிரிகள் உதிரியாகும் நாள், குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், நிலையான வருமானத்திற்கு வழி கிடைக்கும்.

**துலாம்** எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, நல்லவர்களின் தொடர்பால் நலம் காணும் நாள், தாய்வழி ஆதரவு பெருகும், மக்கட் செல்வங்களால் மகிழ்ச்சியுண்டு.

**விருச்சிகம்** எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு, புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**தனுசு** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**மகரம்** சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், கல்யானக்கனவுகள் நனவாகும் வாய்ப்புண்டு, காணாமல் போன பொருளொன்று மீண்டும் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**கும்பம்** விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய பொறுப்புக்கள் சற்று கூடும்.

**மீனம்** உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, தூர தேசச் செய்திகள் ஆச்சரியப்பட வைக்கும், எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், குடும்ப மகிழ்ச்சி கூடும்.

தவிர்க்கப்படும் கடமை தள்ளிப்போடப்படும் கடனாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

கல்கியின் பாகம் - 5

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 1102





"உன்னைக் காப்பாற்றுவதற்காகப் பூங்குழலி படகில் ஏறிக்கொண்டு வந்தாளாக்கும். அழகாய்த்தானிருக்கிறது! உங்கள் இருவரையும் சேர்த்து இந்தக் கஜேந்திரன் காப்பாற்ற வேண்டியதாயிற்று. இந்த யானையின் அறிவே அறிவு! உங்கள் இருவரையும் அதன் துதிக்கையால் பூமாலையை எடுப்பதுபோல் அசங்காமல் கசங்காமல் எடுத்துச் சற்றுமுன் கரையில் விட்டது! இன்று காலையில் இதே யானை கையில் அங்குசத்துடன் நேரங்கழித்து ஓடிவந்த யானைப் பாகனைத் தூக்கிச் சுழற்றி வெகுதூரத்தில் போய் விழும்படி எறிந்தது! அவன் உயிர் பிழைத்திருப்பதே துர்லபம்!"

"ஐயோ! அது என்ன? நானே தங்களிடத்தில் அதைப் பற்றிக் கேட்கவேண்டும் என்றிருந்தேன்"

"என்னை நீ என்ன கேட்க வேண்டுமென்றிருந்தாய்?" "யானைப் பாகனாலும், அங்குசத்தினாலும் தங்களுக்கு ஏதாவது தீங்கு நேர்ந்ததோ என்று கேட்க விரும்பினேன்."

"தீங்கு நேர இருந்தது என்பது உண்மைதான் அது உனக்கு எப்படித் தெரிந்தது? ஜோதிடர் சொன்னாரா, என்ன? அந்தப் பித்து இளையபிராட்டிக்கு இன்னும் போகவில்லையா?"

"ஜோதிடர் சொல்லவில்லை! சொன்னாலும் நாங்கள் நம்பியிருக்க மாட்டோம், பெரிய பழுவேட்டரையர் சொன்னார்!" "என்ன? என்ன? யார் சொன்னார்?"

"ஆம், இளவரசே! தனாதிகாரி பெரிய பழுவேட்டரையர் தான் சொன்னார். நாங்கள் ஜோதிடர் வீட்டில் இருந்தபோது திடும்பிரவேசமாக அவர் உள்ளே நுழைந்து வந்தார். தங்களுக்கு வரக்கூடிய ஆபத்தைப்பற்றிச் சொன்னார். விஷந்தடவிய அங்குசத்தைப் பற்றியும் சொன்னார்!"

"ஆகா! இது பெரிய அதிசயந்தான்! அவருக்கு எவ்விதம் தெரிந்தது? அவரும் ஜோதிடர் ஆகிவிட்டாரா? அல்லது ஒருவேளை. எல்லாரும் சொல்லுவதுபோல அவரே இந்த ஏற்பாடு செய்தாரா?"

"இல்லை இளவரசே! அவர் செய்த ஏற்பாடல்ல. பாண்டிய நாட்டுச் சதிகாரர்கள் இரகசியமாகப் பேசிக் கொண்டிருந்ததை ஒட்டுக் கேட்டதினால் அறிந்து கொண்டாராம்!"

"ஓகோ! இன்னும் ஏதாவது அவர் சொன்னாரா?" "நினைப்பதற்கும் சொல்வதற்கும் பயங்கரமாயிருக்கிறது. தங்களையும், தங்கள் தந்தையையும், மூத்த இளவரசரான ஆதித்த கரிகாலரையும் ஒரே நாளில் யமனுலகம் அனுப்ப அந்தச் சதிகாரர்கள் திட்டமிட்டிருப்பதாகச் சொன்னார்.

அவர் ஆதித்த கரிகாலரைக் காப்பாற்றுவதற்காகக் கடம்பூருக்கு விரைந்து போய்விட்டார். தங்களுக்கும் சக்கரவர்த்திக்கும் இளையபிராட்டி எச்சரிக்கை செய்ய வேண்டும் என்பதாகச் சொல்லிவிட்டுப் போனார்"

"ஆகா! அவருடைய எச்சரிக்கை என் ஒருவன் விஷயத்தில் உண்மையாயிருந்தபடியால் மற்றவர்கள் விஷயத்திலும் உண்மையாகத்தானிருக்க வேண்டும்! சமுத்திரகுமாரி! நீ ஏதோ சொல்ல வேண்டும் என்றாயே?"

(தொடரும்)

---



# சிறுவர் அரங்கம்

யோசப் பாலாவின்...

## கால மாற்றம்



வான்மேகம் இருண்டு காணப்பட்டது. பறவைகள் தம் இருப்பிடங்களை விட்டு வேறு இடங்களுக்கு இடம் பெயர்வை மேற்கொண்டன. மிருகங்கள் அங்குமிங்குமாக அலைவதைக் கண்ட மேசியன் அதனை அவதானித்த படி தாத்தாவிடம் கேட்டான். ஏன் தாத்தா எங்கள் வீட்டு நாய் பூனையும் வானத்துப் பறவைகளும் அங்குமிங்குமாக ஓடித் திரிகிறது.

அதுவா மிருகங்கள் பறவைகள் தங்களின் உணர்வுத் திறனால் காலநிலைகளை அவதானித்து வாழும். இன்று பாரும் வித்தியாசமான வான மூட்டம் அதிகமாக காணப்படுவதால் இயற்கையில் ஏதோ நடக்க இருப்பதை உணர்ந்து தான் அவை இப்படி முன்னாயத்தம் செய்கின்றது பார்த்தாயா என்றார் தாத்தா.

ஏன் இதுபோல் மனிதர்கள் முன்னாயத்தம் செய்வதில்லையா? என விடாப்பிடியாக தாத்தாவிடம் கேள்விகளால் குடைந்தான்.

அவரும் அவரது அனுபவங்களை பேரன் மேசியனோடு பகிர்ந்தார்.

மனிதர்கள் முன்னாயத்தமாக முற்காலத்தில் வாழ்ந்தார்கள். காலநிலைக்குத் தேவையான உணவு வகைகளை பதப்படுத்தி சேமிப்பார்கள். தொழில்களை முன்கூட்டியே செய்வார்கள்.

இது விவசாயம், கடற்தொழில், வீடு கட்டுதல், திருமணம் செய்தல் சடங்குகள் என முன்னோர் அனுபவரீதியில் ஆராய் ந்து திட்டமிட்டார்கள். உண வுப் பழக்கங்களிலும் ஒழுங்கு கள் இருந்ததால் ஆயுள்வேத மருத்துவங்களும் பயனுள்ளதாய் அமைந்தது. இவை இன்றைய நோய் அனர்த்த காலத்திலும் ரசம், கூழ், கசாயம், கஞ்சியாக பயன் தருகின்றன.

இவை நம் நாட்டில் மட்டும் தானா தாத்தா?

இவை உலகில் எங்கும் நடக்கும் விடயம் தான் காலநிலை மாற்றம் தான் வெளிநாட்டுப் பறவைகள் எமது நாட்டிற்கு பல மைல் தூரம் கடந்து வந்து குறிப்பிட்ட காலத்தின் பின் எல்லாமே சென்று விடும்.

பார்த்தாயா இது போல வெளிநாட்டில் வாழ்பவர்களும் உடை உணவு இருப்பிடங்களிலும் மாற்றம் செய்தே வாழ்கின்றார்கள். இதை புரிந்து கொண்ட மேசியன் அது தான் எங்களின் கடற்கரைகள், குளங்களில் புதிய புதிய வெளிநாட்டு பறவைகள் வந்து போவதைக்கண்டேன் தாத்தா. "தாத்தா நீங்கள் இப்போது என்ன செய்கின்றீர்கள்?"

நான் மரக்கறிகளை சீவி வத்தலாக்கி காய விடுகின்றேன். எங்கள் ஊர் பனையில் வருகின்ற பனங்கிழங்கை சீவிக் காய விட்டு ஒடியலாகவும், ஒடியல் மாவாகவும், பினாட்டாகவும் பக்குவப்படுத்தி வைத்து உணவுத் தேவைக்காலத்தில் பயன்படுத்துவேன். எங்கள் வளங்களே எங்கள் சொத்து. அதைப் பாதுகாத்து சத்துள்ள நஞ்சற்ற உணவை நாமே உருவாக்குவதே சிறப்பு தம்பிகளா என்றார்.

புதிய பாதையில் புதிய பயணம் என சிறுவர்கள் மனதில் தொடர சின்னஞ் சிறுசுகளுக்கு புரிய வைத்தால் சிறு வயதில் இருந்தே சுயதேவைக்கான முன்னாயத்தத்தை புரிந்து செயற்படுவார்கள் அல்லவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஞாலம் கருதினுங் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின்.
– திருக்குறள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அரச பதவிகளில் இருந்துகொண்டு எவருக்கும் அநியாயம் செய்யாதீர்கள்

முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்கிறது நம் தமிழ்ப் பழமொழி.

ஆம், நீ இன்று செய்ததன் விளைவை இன்றே நீ அனுபவிப்பாய் என்பது மேற்குறித்த பழமொழியின் உட்பொருள்.

எனவே நாம் நல்லதைச் செய்ய வேண்டும்.ஆனாலும் நம்மில் பலர் தமக்குக் கிடைத்த பதவிகளை – சந்தர்ப்பங்களை – வாய்ப்புகளை பழிதீர்ப்பதற்கும் வஞ்சிப்பதற்கும் தமக்குத் தெரிந்தவர்களுக்குச் சலுகை செய்வதற்கும் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

இத்தகையவர்களின் வஞ்சகத்தால் – பழிதீர்க்கும் பாவ காரியத்தால், பாதிக்கப்படுபவர்கள் பலர்.

அவ்வாறு பாதிக்கப்படுபவர்கள் அல்லல்பட்டு ஆற்றாது அழுகின்றனர். அவர்களின் ஆற்றாமையால் ஊற்றெடுக்கும் கண்ணீர் பாவகாரியம் புரிந்தவர்களை – வஞ்சித்தவர்களை வேரறுத்து விடுகிறது.

எனினும் இந்த அனுபவ ரீதியான யதார்த்தத்தை உணர்ந்து கொள்வதற்கு அவரவரிடம் இருக்கக் கூடிய மும்மலமாய ஆணவம், கன்மம், மாயை என்பன விடுவதாக இல்லை.

உண்மை. எங்கள் தமிழர் பிராந்தியங்களைப் பொறுத்த வரை, அரச கருமம் என்பது அரச அதிகாரிகள் – அரச பணியாளர்களின் மமதையால் பழுதடைந்து போகிறது. அதன் காரணமாக அப்பாவிப் பொதுமக்கள் அரச சேவையைப் பெறமுடியாமல் அந்தரிக்கின்றனர். அதிலும் குறிப்பாக ஏழை மக்கள் ஆற்றலைக்கப்படுகின்றனர்.

இப் பாவகாரியம் சம்பந்தப்பட்டவர்களைச் சும்மா விடும் என்று தயவு செய்து யாரும் நினைத்துவிடாதீர்கள்.

இங்கு தமிழ்ப் பிராந்தியம் என்று நாம் சுட்டிக்காட்டுவதற்குக் காரணம்; தென்பகுதியில் சிங்கள அரச அதிகாரிகள் மற்றும் சிங்கள அரச பணியாளர்கள் தங்கள் பணிகளை நிறைவாகச் செய்கின்றனர்.

முடிந்தளவில் அவர்கள் பொதுமக்களுக்கு உதவுகின்றனர்.

குறித்த அரச சேவையைப் பொதுமக்கள் பெற்றுக் கொள்வதற்கு அவர்கள் வழிகாட்டுகின்றனர். இதற்கும் மேலாக, பொதுமக்களுடன் மனித நேயத்துடனும் அன்பாகவும் பழகுகின்றனர்.

அதன் காரணமாகவே சிங்கள அரச உத்தியோகத்தர்கள் மிகவும் நல்லவர்கள் என்று நம் தமிழ் மக்கள் புகழ்வதை நாம் இப்போதும் கேட்டுக்கொண்டே இருக்கின்றோம்.

ஆனால் ஒருகணம் எங்கள் தமிழ் அரச உத்தியோகத்தர்களைப் பாருங்கள். அவர்களில் அனைவரும் அப்படி இல்லை என்றாலும் அதில் கணிசமானவர்களுக்குப் பொது மக்களுடன் – சக அரச சேவையாளர்களுடன் பழகத் தெரிவதில்லை.

குறிப்பாக அவர்கள் மிகவும் மோசமான தொடர்பாடலை – அணுகுமுறைகளைப் பின்பற்றுவதை நடைமுறையில் காணமுடிகிறது.

ஆகையால்தான் இவ்விடத்தில் நாம் மீண்டும் மீண்டும் கூறுகின்ற அறம்; பாவபழி ஒருபோதும் எவரையும் விட்டு வைக்காது என்பதாகும்.

# நஷ்டஈட்டின் பெயரால் பூர்வீக நிலங்களை முழுமையாக கபளீகரம் செய்யச் சதி

## வலி. வடக்கில் வலுக்கும் எதிர்ப்பு

மக்களின் கோரிக்கைக்கும் விருப்பங்களுக்கும் மாறாக, இராணுவத்தால் அபகரிக்கப்பட்டுள்ள பூர்வீக நிலங்களுக்கு நஷ்டஈடு வழங்கும் சதித் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக வலி.வடக்கு மீள்குடியேற்ற அபிவிருத்திக்கூட்டுறவுச் சங்கம் தமது கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து அச்சங்கம் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இந்தச் சதி முயற்சியின் ஒரு கட்டமாக, இம் மாதம் 4 ஆம் திகதியன்று தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் நஷ்டஈடு வழங்குவதற்கான கலந்துரையாடல் ஒன்றுக்குத் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்காக காணிகளை இழந்து தவிக்கும் மற்றும் எக்காலத்திலும் நஷ்டஈடு கோராத மக்களுக்கே பிரத்தியேகமாக கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு அழைக்கப்படும் மக்களிடம் ஏதோ ஒரு வகையில் சம்மதத்தைப் பெற்று, அவர்களின் பூர்வீகக் காணிகளை நிரந்தரமாகக் கபளீகரம் செய்யவே இன்றைய அரசும் அதன் அதிகாரிகளும் தீவிரமாக முயற்சிக்கின்றனர்.

இராணுவப் பிடிக்குள் இருக்கும் தமது சொந்த நிலங்களை நிபந்தனையின்றி விடுவிக்குமாறு கோரி மயிலிட்டி மக்கள் தொடர்ந்து 15 வாரங்களாகத் தொடர் அடையாளப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் நிலையில், மக்களின் இந்த நியாயமான போராட்டத்தை வலுவிழக்கச் செய்யும் சதி வேலைகளிலேயே அரசு இறங்கியுள்ளது.

எனவே பாதிக்கப்பட்ட மக்கள் அனைவரும் ஒரே நிலைப்பாட்டில் உறுதியாக நின்று போராடினால் மட்டுமே எமது காணி நிலங்களை வெற்றிகரமாக மீட்டெடுக்க முடியும்.

குறித்த கலந்துரையாடல் தினத்திற்கு முன்னர் எந்த வகையான நஷ்டஈடு, எந்தக் காலப்பகுதிக்குள் வழங்கப்படும் என்பது குறித்த தெளிவான உத்தரவாதத்தை அரசு எழுத்து மூலம் வழங்க வேண்டும்.

அரசின் சூழ்ச்சி வலையில் சிக்கி, நஷ்டஈட்டிற்காக எமது பூர்வீகச் சொத்துக்களை இழந்துவிடாமல் மக்கள் அனைவரும் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (ம-7)

# மடு அன்னையின் திருவிழா குறித்து விசேட கலந்துரையாடல்

(மன்னார்)

மடு அன்னையின் ஆவணித் திருவிழா தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று வெள்ளிக்கிழமை மாலை 3 மணியளவில் மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற குறித்த கலந்துரையாடலில் மன்னார் மறை மாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை பி.கிறிஸ்து நேசரத்தினம் அடிகளார் மற்றும் மடு திருத்தலத்தின் பரிபாலகர் அருட்தந்தை எஸ். ஜே. பெப்பி சோசை அடிகளார், திணைக்களத் தலைவர்கள், பிரதேச சபைகளின் செயலாளர்கள், தவிசாளர்கள், கடற்படை, இராணுவம்,பொலிஸ் உயர் அதிகாரிகள், வைத்தியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

மடு அன்னையின் திருவிழாக் காலப்பகுதியில் பாடசாலைகளுக்கு விடுமுறை என்பதினாலும் இம்முறை பல இலட்சக்கணக்கான மக்கள் மடு திருத்தலத்திற்கு வருகை தரக்கூடும் என்பதன் அடிப்படையில் அனைத்து வித ஏற்பாடுகள் குறித்தும் விரிவாக இதன் போது ஆராயப்பட்டது.

குறிப்பாக சுகாதாரம், மருத்துவம், சாரணர் சேவை, கழிவு அகற்றும் நடவடிக்கை, பாதுகாப்பு நடவடிக்கைகள், குடிநீர் விநியோகம், மின்சாரம், உணவு மற்றும் கடைகள் , போக்குவரத்து, சுற்று நீதிமன்றம் உள்ளிட்ட விடயங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டன. இதன் போது கலந்து கொண்ட திணைக்களங்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாக தெரிவித்தன.

இந்த நிலையில் எதிர்வரும் 11 ஆம் திகதி காலை 11 மணிக்கு மடு திருத்தலத்தில் 2 ஆவது கலந்துரையாடலை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது. (ம-7)

# சுற்றாடல் விழிப்புணர்வு; கருத்தரங்கு யாழில்

(யாழ்ப்பாணம்)

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் யாழ். மாவட்ட அலுவலகத்தினால் யாழ்ப்பாண வர்த்தகர்களுக்கு திருத்தப்பட்ட சுற்றாடல் சட்டம், தடை செய்யப்பட்ட பொலித்தீன் - பிளாஸ்ரிக் வகைகள் மற்றும் அதற்குப் பதிலீடாக பயன்படுத்தக் கூடிய மாற்றீட்டுப் பொருட்கள் தொடர்பில் விழிப்பூட்டல் கருத்தரங்கொன்று நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் திறன் அபிவித்தி அலகு கணனி பயிற்சி மண்டபத்தில் (யாழ்ப்பாண பிரதேச செயலகம் அருகில்) இடம்பெறவுள்ளது.

எனவே இக் கலந்துரையாடலில் பங்குபற்றி எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள சட்ட நடவடிக்கைகள் தொடர்பில் அறிந்து கொள்வதோடு சுற்றுச்சூழல் நேயமுள்ள வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள ஒத்துழைப்பு வழங்குமாறும் யாழ். வணிகர் கழகம் அழைப்பு விடுத்துள்ளது.(ம-7)

# தெற்கில் வலுப்பெற்றுள்ள துப்பாக்கிச்சூட்டுக் கலாசாரம்

## மாத்தறையில் நேற்றும் சூடு

(மாத்தறை)

மாத்தறை மிரிஸ்ஸ சந்திப் பகுதியில் நேற்று (31) இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் 34 வயதுடைய நபர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவரால் இத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த நபர் மாத்தறை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இத் துப்பாக்கிச் சூட்டிற்கு ‘ரிவோல்வர்’ ரகத் துப்பாக்கி பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என சந்தேகம் வெளியிட்ட பொலிஸார் துப்பாக்கிச்சூட்டுக்கான காரணம் தொடர்பிலான விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் வெப்பமயமாதலும் ஜெல்லிமீன் பெருக்கமும்

காரைநகரின் புகழ்பெற்ற கசூரினா கடற்கரைக்கு சுற்றுலா செல்வது என்பது நம் அனைவருக்கும் ஒரு மகிழ்ச்சியான அனுபவம். அலைகளற்ற சாந்தமான கடல், தூரத்திற்குச் செல்லக்கூடிய ஆழமற்ற பகுதி எனப் பலரையும் ஈர்க்கும் இந்த இடத்திற்கு, அண்மைக் காலங்களில் ஜெல்லி மீன்களின் (Jellyfish) வருகை அதிகரித்துள்ளதாக கடலோர மக்களும், சுற்றுலாப் பயணிகளும் கவலை தெரிவித்து வருகின்றனர்.

தற்போது யாழ்ப்பாணக் குடாநாட்டின் கடலோரச் சுற்றுலாத் துறைக்கும், எமது கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்திற்கும் இந்த ஜெல்லிமீன்களின் அசுரப் பெருக்கம் ஒரு பெரும் சவாலாக உருவெடுத்துள்ளது. இது ஒரு தற்காலிகப் பிரச்சினை அல்ல மாறாக, எமது கடல் சூழலில் ஏற்பட்டு வரும் பாரிய மாற்றத்தின் அறிகுறியாகும்.

### ஜெல்லிமீன் என்றால் என்ன? (அறிவியல் பார்வை)





இழுது மீன்கள், சொறிமுட்டை மீன்கள், கண்ணாடி மீன்கள் எனப் பல பெயர்களால் அழைக்கப்படுகின்ற ஜெல்லிமீன்கள் உண்மையில் மீன்கள் அல்ல. இவை பூமியில் தோன்றிய மிகவும் பழமையான பலசெல் உயிரினங்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றன. இவை "நிடாரியா" (Cnidaria) என்ற தொகுதியைச் சேர்ந்த முதுகெலும்பற்ற, மூளையோ, இரத்தமோ அல்லது இதயமோ இல்லாத எளிய கடல் வாழ் உயிரினங்களாகும்.

இவற்றின் உடலில் 95% இற்கும் அதிகமாக நீர் மட்டுமே நிறைந்துள்ளது. பரிணாம வரலாற்றைப் பொறுத்தவரையில், ஜெல்லிமீன்கள் சுமார் 500–700 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பே பூமியில் தோன்றியதாக விஞ்ஞானிகள் கருதுகின்றனர். டைனோசர்கள் சுமார் 230 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய நிலையில், ஜெல்லி மீன்கள் அதற்கு முன்னரே பூமியின் கடல்களில் வாழ்ந்து வந்தன. இதனால், பல பெரும் அழிவு நிகழ்வுகளையும் (Mass Extinctions) தாண்டி இன்றுவரை உயிர்வாழ்ந்து வரும் வெற்றிகரமான உயிரினக்குழுவாக ஜெல்லிமீன்கள் கருதப்படுகின்றன. இதுவரை 3000 இற்கும் மேற்பட்ட ஜெல்லிமீன் இனங்கள் உலகம் முழுவதும் கடலின் மேற்பரப்பு நீரிலிருந்து ஆழ்கடல் வரை பல்வேறு கடல் சூழல்களில் கண்டறியப்பட்டாலும், இவற்றின் பரந்துபட்ட வாழ்வியல் தன்மைக்கேற்ப இன்னும் ஏராளமான இனங்கள் அறியப்படாமலேயே உள்ளன.

இவை குடை போன்ற அமைப்பைக் கொண்டவை. குடையின் அடிப்பாகத்தில் 4 முதல் 8 பரிசக் கொம்புகளால் (Oral arms) சூழப்பட்ட வாய் காணப்படும். இவை 1 மில்லிமீற்றர் தொடக்கம் 7 மில்லிமீற்றருக்கும் அதிகமான குடை விட்டம் கொண்டனவாகக் காணப்படுகின்றன. பார்ப்பதற்கு அழகாக கண்ணாடி போன்று இருந்தாலும், இவற்றின் உடலின் கீழ் உள்ள நீளமான இழைகளில் (Tentacles) "நெமடோசிஸ்ட்" (Nematocysts) எனப்படும் பல்லாயிரக்கணக்கான நுண்ணிய நச்சுப்பைகள் உள்ளன.

மனித உடலோ அல்லது வேறு உயிரினங்களோ இதன் மீது படும் போது, இந்த நச்சுப்பைகள் துப்பாக்கிக் குண்டுகளைப் போல நச்சை (venom) உடலினுள் செலுத்துகின்றன. ஜெல்லிமீன்கள் தங்களது இழைகளில் காணப்படும் நிடோசைட்டுகள் (Cnidocytes) எனப்படும் கொட்டும் செல்களின் உதவியால் இரைகளைப் பிடிப்பதோடு இரை கௌவிகளிடமிருந்து தற்காத்துக்கொள்கின்றன. இவை முக்கியமாக மிதவை உயிரினங்கள் (planktons) சிறிய மீன்கள் மற்றும் மீன் முட்டைகள் போன்றவற்றை உணவாக உட்கொள்கின்றன. அதேவேளை கடலாமைகள் மற்றும் சில மீன் இனங்களுக்கு உணவாகவும் பயன்படுகின்றன.

ஜெல்லி மீன்கள் தங்களின் குடை போன்ற உடலை (bell) துடிப்பு/சுருக்குவதன் மூலம் தானாக நீந்தித் திரியக் கூடியவையாயினும், பெரும்பாலும் காற்று மற்றும் அலையின் நீரோட்டங்களின் போக்கிலேயே மிதந்து காணப்படுகின்றன. சில ஜெல்லி மீன்கள் மிகவும் நச்சுத் தன்மை வாய்ந்ததாகக் காணப்படினும் பல சாதாரணமானவையாகவே உள்ளன. இவற்றின் உடல் ஒளி ஊடுருவும் (Transparent) தன்மை கொண்டது. இதன் காரணமாக இவை நீரில் மிதந்து வருவது பெரும்பாலும் மனிதக் கண்களுக்குப் புலப்படுவதில்லை. எனினும், சில இனங்கள் கவர்ச்சியான வண்ணங்களிலும் காணப்படுகின்றன.



(a) Nematocyst with stored thread and barb (b) Nematocyst after firing

யாழ் குடாநாட்டைச் சூழவுள்ள கடல் பகுதிகளில் பல்வேறு வகையான ஜெல்லி மீன்கள் காணப்படுகின்றன. இவற்றில் சில மனித னுக்கும், சூழலுக்கும், மீனவர்களுக்கும் ஆபத்தானவையாக உள்ளன. குறிப்பாக எமது கடற்பரப்பில் பல இனங்கள் அடையாளப் படுத்தப்பட்டுள்ளதுடன் அவற்றின் தாக்கமும் அவதானிக்கப்பட்டுள்ளது.

### மருத்துவத் துறையில் ஜெல்லி மீன்களின் பங்கு

கடல் சூழலமைப்பில் முக்கிய பங்காற்றும் ஜெல்லி மீன்கள் உயிரியல் மற்றும் மருத்துவத் துறையில் முக்கியமான வளமாகக் கருதப்படுகின்றன. அவற்றின் நச்சு மற்றும் உயிர்ச் செயற்பாட்டு சேர்மங்கள் (bio active compounds) புற்று நோய் (Cancer) வலி நிவாரணம் (Analgesia), மூட்டுவலி (Arthritis) சிகிச்சை மற்றும் நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்துகள் (Antimicrobial) தொடர்பான ஆராய்ச்சிகளில் பயன்படுத்தப்படுகின்றன.

மேலும், சில ஜெல்லிமீன் இனங்களிலிருந்து பெறப்படும் கொலாஜன் (Collagen) காயம் ஆறுதல் மற்றும் இழைய மறுசீரமைப்பில் உதவுகிறது. Aequorea victoria என்ற ஜெல்லிமீனிலிருந்து பெறப்படும் பச்சை ஒளிரும் புரதம் (Green Fluorescent Protein - GFP) உயிரியல் மற்றும் மருத்துவ ஆராய்ச்சிகளில் கலங்கள் மற்றும் மரபணுக்களை ஆய்வு செய்யப் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. இதனால், ஜெல்லி மீன்கள் எதிர்கால மருத்துவ முன்னேற்றங்களுக்கு முக்கிய பங்களிப்பை வழங்குகின்றன.

### பொருளாதாரப் பயன்பாடும் சர்வதேச ஏற்றுமதியும்

ஜெல்லிமீன்கள் பல ஆசிய நாடுகளில் பாரம்பரிய உணவாகப் பயன்படுத்தப்படுகின்றன. உலக ஜெல்லிமீன் வணிக அறுவடையின் 99.9% ஆசியாவிலேயே நடைபெறுகிறது.

இலங்கை 1980 களில் ஜெல்லிமீன் வணிக அறுவடை மற்றும் சேகரிப்பில் நுழைந்தது. எனினும் 2000 ஆண்டுகளில் பதப்படுத்தப்பட்ட ஜெல்லிமீன்களை அதிக அளவில் ஏற்றுமதி செய்யும் முக்கிய வழங்குநர் நாடுகளில் ஒன்றாக வளர்ந்தது.

இலங்கையில் வணிக ரீதியாக அறுவடை செய்யக்கூடிய மற்றும் உண்ணக்கூடிய ஜெல்லிமீன் இனங்கள் நான்கு காணப்படினும் Crambione orsini (C. orsini) மற்றும் Lobonemoides gracilis (L. gracilis) ஆகிய இரு இனங்களே பதப்படுத்தப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இவ்வினங்கள் முறையே இலங்கையின் தென் கிழக்கு மற்றும் வடகிழக்குக் கடற்பகுதிகளில் இருந்து சேகரிக்கப்படுகின்றன. 2016 முதல் 2020 வரை மேற்கொள்ளப்பட்ட விரிவான ஆய்வில், இலங்கையின் ஜெல்லி மீன் மீன்பிடித்தொழில் பெரும்பாலும் பருவகால அடிப்படையில் சிறிய அளவிலான பாரம்பரிய மீனவர்களால் மேற்கொள்ளப்பட்டதாக கண்டறியப்பட்டது. எனினும், நாட்டின் பல பகுதிகளில் போதுமான அளவில் ஜெல்லிமீன் பெருக்கங்கள் (Blooms) தொடர்ச்சியாகக் காணப்படாத காரணத்தால், இந்தத் தொழில் 2017 ஆம் ஆண்டிற்குப் பிறகு பெரிய அளவில் தொடரப்பட வில்லை.

### வாழ்க்கைச் சுழற்சியும் பெருக்கத்திற்கான காரணங்களும்

ஜெல்லி மீன்களின் வாழ்க்கைச் சுழற்சியில் இரண்டு முக்கிய கட்டங்கள் உள்ளன.

1. அடித்தள (Benthic) பாலிப் (Polyp) நிலை, கடலின் அடியில் நிலையாக ஒட்டியிருந்து பாலின முதிர்ச்சி அடையும் முன் பாலினமற்ற மொட்டுவிடுதல் (asexual budding) மூலம் பெருகக்கூடும்.

2. நீரில் மிதக்கும் (Pelagic) மெடூசா (Medusa) நிலை. நாம் கடலில் பார்க்கும் குடை வடிவ இந்நிலை பாலின இனப்பெருக்க நிலையாக இருந்து planula எனப்படும் இளம் குடம்பிகளை உருவாக்குகிறது. சுற்றுச்சூழல் மாற்றங்கள் இந்த இரு நிலைகளையும் பாதிக்கக்கூடும். குறிப்பாக, பாலிப் நிலைப்பெருக்கம் பற்றிய அடிப்படைத் தகவல்களே பல இனங்களுக்கு இன்னும் தெரியவில்லை.

எனவே, ஜெல்லிமீன் பெருக்கங்களைப் புரிந்துகொள்ள அவற்றின் அடித்தள வாழ்வியல் சூழலியல் குறித்து மேலும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். பொதுவாக குறைந்த எண்ணிக்கையிலான ஜெல்லிமீன்கள் மட்டுமே காணப்படும் சூழலில் அபாயம் மிகவும் குறைவாக இருக்கும். ஆனால், குறிப்பிட்ட சில இனங்களின் பெரும் கூட்டங்கள் கரையோர பகுதிகளை அடையும் போது நிலைமைகள் முற்றிலும் மாறி விடுகின்றன.

ஒரு குறிப்பிட்ட பகுதியில் ஜெல்லிமீன்கள் பெருமளவில் தோன்றுவது இரண்டு காரணங்களால் நிகழலாம்.

1. Bloom (பூரிப்பு), இனப்பெருக்கத்திற்கு ஏற்ற சாதகமான சூழ்நிலைகள் காரணமாக ஒரு குறிப்பிட்ட இடத்திலேயே அவற்றின் எண்ணிக்கை வேகமாக அதிகரிப்பது.

2. Outbreak (வெடிப்பு), ஓரிடத்தில் நிலையாக இருந்த ஒரு தொகை, இயற்பியல், வேதியியல் அல்லது நடத்தை சார்ந்த காரணிகளால் (அலைகள்/நீரோட்டம்) புதிய இடத்திற்கு இடம்பெயர்ந்து பெருமளவில்தோன்றுவது.

(சனிக்கிழமை தொடரும்)

செல்வி வாசுகி கிருபானந்தன்
உதவி விரிவுரையாளர்,
விலங்கியல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராணுவத்தின்...

இலங்கை இராணுவத்தின் 26 ஆவது இராணுவத் தளபதியாக லெப்டினன்ட் ஜெனரல் நிலந்த பிரேமரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

நாட்டின் பாதுகாப்பையும் இராணுவத்தின் நிர்வாகத்தையும் திறம்பட வழி நடத்தும் நோக்கில் இந்த உயரிய பதவி நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

புதிய தளபதியாகப் பொறுப்பேற்கும் அவர், இராணுவத்தின் பல்வேறு முக்கிய பிரிவுகளில் பணியாற்றிய நீண்டகால மற்றும் அனுபவமிக்க சேவைப் பின்னணியைக் கொண்டவராவார்.

இவர் இதற்கு முன்பு இராணுவத்தின் பிரதான அதிகாரியாகவும் கிழக்குப் பாதுகாப்புப் படைத் தளபதியாகவும் மற்றும் இராணுவ ஊடகப் பணிப்பாளராகவும் பணியாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## எரிபொருள்...

திருத்தத்திற்கு அமைய ஓகஸ்ட் மாதத்தில் எரிபொருள் விலையில் எவ்வித மாற்றமும் மேற்கொள்ளப்பட மாட்டாது என இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

அதன் தலைவர் ஜே.டி.ராஜ கருணா நேற்று (31) நடைபெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே இதனைத் தெரிவித்தார்.

இதற்கமைய, ஒக்டேன் 92 ரகப் பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 414 ரூபாய் என்ற நிலையிலேயே தொடர்ந்தும் நிலவும்.

அத்துடன், ஒட்டோ டீசல் லீற்றர் ஒன்றின் விலை 382 ரூபாயாகவும் ஒக்டேன் 95 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 495 ரூபாயாகவும் அதே விலையில் தொடர்கின்றது.

சுப்பர் டீசலின் விலை 478 ரூபாயாகவும் மண்ணெண்ணெய் விலை 285 ரூபாய் என்ற நிலையிலும் மாற்றமின்றி நிலவுவதாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

## வட்டுவாகல்...

ணங்கள் மற்றும் பொதுமக்களுக்கு விடுவிப்பதற்கான சாத்தியக் கூறுகள் தொடர்பான விசேட கலந்துரையாடல், முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நேற்று (31) வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் வரவேற்புரையாற்றிய முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் அ.உமாமகேஸ்வரன்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 17 ஆண்டுகளில் 2,262.5 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன. இன்னமும் 1,493.2 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட வேண்டியுள்ளன. இதில் வட்டுவாகல் மற்றும் கேப்பாப்புலவில் அமைந்துள்ள காணிகள் மிக முக்கியமானவையாகும் எனக் குறிப்பிட்டார்.

தொடர்ந்து உரையாற்றிய கூட்டுறவுப் பிரதியமைச்சரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான உபாலி சமரசிங்க,

நாட்டில் மீண்டும் போர் ஏற்படாது. இருப்பினும் பாதாள உலகக் குழுக்களின் கட்டுப்பாடு மற்றும் போதைப் பொருள் ஒழிப்பு உள்ளிட்ட தேசியப் பாதுகாப்புடன் தொடர்புடைய சில முக்கிய விடயங்கள் உள்ளன. இவை குறித்தும் கவனம் செலுத்தி, மக்களின் காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும். மக்களுக்குரிய காணிகளை மீள வழங்குவதில் அரசாங்கம் உறுதியாக உள்ளது என்றார்.

தொடர்ந்து உரையாற்றிய பாதுகாப்புப் பிரதியமைச்சர் மேஜர் ஜெனரல் அருண ஜெயசேகர,

தேசியப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகவே நாட்டின் 25 மாவட்டங்களிலும் முப்படையினரின் முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

நாட்டில் ஏற்படும் அசாதாரண மற்றும் இடர் நிலைமைகளின் போது பொலிஸாருடன் இணைந்து முப்படையினர் களப்பணியாற்றுகின்றனர்.

போர் நிறைவுற்ற 2009 ஆம் ஆண்டிலிருந்து 2024 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் வரை 9,480 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன. எமது அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர், இந்த ஆண்டு ஜூன் மாதம் வரை 615 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து கலந்துரையாடல்கள் மூலம் மக்களின் காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுப்போம் எனத் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சு.முரளிதரனால் கனகாம்பிகைக்குளத்தில் காணி விடுவிப்புக்கான கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இராணுவ முகாமின் வேலியை 10 மீற்றர் தூரம் பின்னோக்கி நகர்த்துவதன் மூலம் 3 குடும்பங்களுக்குச் சொந்தமான ஒன்றரை ஏக்கர் காணியை விடுவிக்க முடியும் என அவர் சுட்டிக் காட்டினார். இதனைச் சாதகமாகப் பரிசீலித்து நடவடிக்கை எடுப்பதாகப் பாதுகாப்பு பிரதியமைச்சர் தெரிவித்தார்.

திருவிழாக் காலங்களில் கனகாம்பிகைக்குள முகாம் அமைந்துள்ள வீதியைப் பொதுமக்கள் பயன்படுத்த அனுமதிக்குமாறு முன்வைக்கப்பட்ட கோரிக்கையையும் பிரதியமைச்சர் ஏற்றுக்கொண்டார். மேலும், அப்பகுதியில் இராணுவக் கட்டடத்துடன் உள்ள காணியை விடுவிப்பதற்கு இராணுவத்தினரால் 8.5 மில்லியன் ரூபா கோரப்பட்டுள்ள நிலையில், கோயில் நிர்வாகத்தால் அத்தொகையைச் செலுத்த முடியாதிருப்பதை மாவட்டச் செயலாளர் சுட்டிக்காட்டியதை யடுத்து, அதனை மீள்பரிசீலனை செய்யவும் பிரதியமைச்சர் இணக்கம் தெரிவித்தார்.

கடந்த மே மாதம் பாதுகாப்பு பிரதியமைச்சரால் பார்வையிடப்பட்ட இயக்கச்சியிலுள்ள காணியை இன்னும் 3 மாதங்களுக்குள் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என இராணுவத்தினர் இதன் போது தெரிவித்தனர்.

வட்டுவாகல் மற்றும் கேப்பாப்புலவு காணி உரிமையாளர்கள் சார்பில் கலந்து கொண்டவர்கள் தமது கோரிக்கைகளை முன்வைத்தனர். வட்டுவாகல் பகுதியில் பொதுமக்களின் தனியார் காணிகளை விடுவிப்பதற்கு முன்பாக, அப்பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பணிகளை நிறைவு செய்து காணியை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பிரதியமைச்சர் உறுதி அளித்தார்.

கேப்பாப்புலவில் உடனடியாக 6.5 ஏக்கர் காணியை விடுவிப்பதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதாகக் குறிப்பிட்ட பிரதியமைச்சர், எஞ்சிய காணிகளை விடுவிப்பது தொடர்பில் மாவட்ட மட்டத்தில் குழுவொன்று அமைக்கப்பட்டு, கள நிலைமைகளை ஆராய்ந்து தீர்மானம் எடுக்கப்படும் எனத் தெரிவித்தார். (ம-7)

## பேருந்து...

தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று மதியம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் 55 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவரே உயிரிழந்தவராவார்.

கொழும்பிலிருந்து முல்லைத்தீவு நோக்கிப் பயணித்த சொகுசுப் பேருந்து மோட்டார் சைக்கிளில் பயணித்த குறித்த நபரை மோதியதிலேயே குறித்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7)


மஹஜன சம்பத — திகதி 2026.07.31 — சீட்டிழுப்பு இலக்கம் 6265 — E 7 7 6 8 6 4

அத சம்பத — E 6 8 6 4 — சீட்டிழுப்பு இலக்கம் 0840

சுப தவசக் — திகதி 2026.07.31 — சீட்டிழுப்பு இலக்கம் 0381 — மிதுனம் 39 46 66 — 2029

தன நிதானய — திகதி - 2026.07.31 — சீட்டிழுப்பு இலக்கம் - 2295 — V 14 23 63 80 V

மெகா பவர் — திகதி 31/07/2026 — சீட்டிழுப்பு இலக்கம் 2613 — H 05 21 30 69 80

ஜய — 2026.07.31 — சீட்டிழுப்பு இலக்கம் 0533 — D 2 4 2 8

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4507 — சீட்டிழுப்பு திகதி 31.07.2026 — Y 10 44 56 75

ஹந்தஹன — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2026.07.31 — சீட்டிழுப்பு 1574 — மிதுனம் 07 11 52 53 மிதுனம்

உத்தியோகபூர்வ முடிவுகள் — சுபிரி வாசனா — 31.07.2026 — வெற்றி வாரம் 0973 — C 9 6 4 4 2 1 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.25,505,166.80

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 3239 — 25000 பணப் பரிசு 68876 — சீட்டிழுப்பு திகதி 2026.07.31 — தினம் வெள்ளிக்கிழமை — 29 37 54 56 L — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 63,181,460.00

சனிதா — திகதி 31.07.2026 — வெற்றி வாரம் 5400 — 50 65 69 70 G — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,658,775.20 — 95267

சசிரி — வெற்றி வாரம் 1069 — சீட்டிழுப்பு திகதி 31.07.2026 — வெள்ளிக்கிழமை — 20 22 41 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.3,944,600.00

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4951 — சீட்டிழுப்பு திகதி 31.07.2026 — தினம் வெள்ளிக்கிழமை — 09 32 48 55 கன்னி — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.8,965,973.60

லக்ன — ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — G 01 01 30 36 45 — 2415 — 31.07.2026 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.328,541,463.00

அட கோடிபதி — வெள்ளிக்கிழமை — வெற்றி வாரம் 3065 — சீட்டிழுப்பு திகதி 2026.07.31 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.61,145,413.60 — 48 58 59 76 Z


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## வடக்கு...

முன்தினம் வவுனியாவில் நடைபெற்றது.

அங்கு கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

30 ஆண்டுகளுக்கும் மேலாக நிலவிய யுத்தத்திற்கு நிர்வாக அதிகாரங்களும் சேவைகளும் பரவலாக்கப்படாமையும் ஒரு காரணியாக அமைந்தது. இத்தகைய நடவடிக்கைகளை பல ஆண்டுகளுக்கு முன்பே மேற்கொண்டிருந்தால் மக்கள் எதிர்கொண்ட இன்னல்களைக் குறைத்திருக்க முடியும்.

ஜனாதிபதியின் அறிவுறுத்தலின் பேரில் வடக்கில் நிலவும் கடுமையான குடிநீர் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கான முதற்கட்ட நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளதுடன், யுத்தத்தினால் இழக்கப்பட்ட காணி உரிமைகளை மீள வழங்கி தீர்த்து வைக்கும் விசேட திட்டமும் சேதமடைந்த வீடுகளுக்காகப் புதிதாக 13,000 வீடுகளைக் கட்டுவதற்கான திட்டமும் கலந்துரையாடல் மட்டத்தில் உள்ளன.

கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் கால்நடைகளைப் பதிவு செய்யும் புதிய நடைமுறையின் மூலம் உரிமையை உறுதிப்படுத்தி, அரசாங்கக் கடன் வசதிகளைப் பெற்றுக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

கடந்த தேர்தல்களில் வட பகுதி மக்கள் அரசாங்கத்தின் மீது வைத்த நம்பிக்கையை நூற்றுக்கு நூறு சதவீதம் பாதுகாத்து, மீண்டும் ஒரு போதும் இனவாத அல்லது மதவாத மோதல்கள் ஏற்பட இடமளிக்கப் போவதில்லை. சிங்கள, தமிழ், முஸ்லிம் ஆகிய அனைத்து மக்களும் சகோதரத்துவத்துடன் வாழக்கூடிய ஒரு இலங்கைத் தேசியத்தைக் கட்டியமுப்புவோம் என்றார். (ம-7)


## மணப்பெண் தேவை

1. சாவகச்சேரி - சிறுப்பிட்டி, இந்து, கௌரவ குலம், உத்தராடம், BSc Engineer, UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (25888)
2. நயினாதீவு - சாவகச்சேரி, இந்து, கௌரவ குலம், 1994, புனர்பூசம், BSc in Software Development, Canada மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (58357)
3. உடுப்பிட்டி - நீர்வேலி, இந்து, 1991, பரணி, A/L, Germany, மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (58017)
4. நல்லூர், இந்து, 1991, திருவாதிரை, BSc, UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (57594)
5. திருநெல்வேலி - நீர்வேலி, இந்து, 1980, சித்திரை, Quantity Surveyor மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (57113)
6. Jaffna Town, இந்து, 1979, புனர்பூசம், Business Management, UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (26347)
7. நீர்வேலி - கைதடி, இந்து, 1987, அத்தம், A/L, கௌரவ குலம், France மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (25868)
8. திருநெல்வேலி, இந்து, கௌரவகுலம், 1982, உத்தராடம், Diploma, Canada மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (25820)
9. புலோலி, இந்து, கௌரவ குலம், 1981, கார்த்திகை, Masters Degree, UK Citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (26351)
10. வேலணை, இந்து, கௌரவகுலம், 1987, ஆயிலியம், IT Degree, Software Engineer, Vegetarian, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (58553)

எம்மிடம் எல்லா நாட்டிலும் Unmarried, Divorce மணப்பெண்களும் மாப்பிள்ளைகளும் உண்டு. (C-6146)

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728
074 387 3686

## வீட்டுப் பணிப்பெண் தேவை

வயோதிபப் பெண்ணொருவரை வீட்டில் தங்கி இருந்து உதவி செய்யக் கூடிய பெண் தேவை. (உணவு, தங்குமிட வசதி உண்டு). சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். (2549)

076 584 7149
முகவரி : உசன், மிருசுவில்.

## காணி விற்பனைக்குண்டு

மானிப்பாய் றோட் செழியன் வீதியில் அமைந்துள்ள 2 பரப்பாகப் பிரிக்கப்பட்டுள்ள 18 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
(14 அடி பாதையுடன்) 1 பரப்பு விலை 18 லட்சம்

076 669 0996
076 882 8694 (8179)

## பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கி நின்று பணி புரிவதற்கு 45 வயதுக்கு மேற்பட்ட பெண் ஒருவர் உடனடியாகத் தேவை. (8185)

தொடர்புகளுக்கு
077 217 3113

## கணக்கீடு

திரு.க.பா.பாலகஜன்

இன்று ஆரம்பம்

A/L 2028 & 2027 புதிய பிரிவுகள்


- பாடத்துறை மாறிப்படிக்கும் மாணவர்கள் மற்றும் தனிப் பாடமாக எடுக்க விரும்பும் மாணவர்களுக்குமான புதிய பிரிவுகள்
- உங்கள் தெரிவு சிறந்ததாக இருந்தால் உங்கள் கணக்கீட்டு பெறுபேறு உச்சம் பெறும்.

NEC - யாழ்நகர், KBK - கந்தர்மடம்,கொழும்புத்துறை
077 452 0043, 076 535 0999 (C-6143)


## மரண அறிவித்தல்

### சின்னையா சண்முகசுந்தரம்

(முன்னாள் ஸ்ரீபார்வதி அச்சகம், திருவள்ளுவர் அச்சகப் பணியாளர், முன்னாள் ஒலி, ஒளி அமைப்பாளர்)



பிறப்பு 12.05.1936 இறப்பு 29.07.2026

9ஆம் வட்டாரம், புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா சண்முகசுந்தரம் அவர்கள் கடந்த (29.07.2026) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - கனகம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - சிவக்கொழுந்து தம்பதியினரின் பாசமிகு மருமகனும் நேசம் என அழைக்கப்படும் செல்வநேசம் அவர்களின் அன்புக் கணவரும் மதிவதனி (Germany), சிவகுமார் (France), சந்திரவதனி (France), சசிவதனி, சசிகுமார் (பிரபா - London) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பரமேஸ்வரன் (செல்வன்), விக்னேஸ்வரன், சந்திரலேகா, V.K.அரசரட்ணம், மைதிலி, கமலேஸ்வரி, மங்களேஸ்வரி, பரமேஸ்வரன், சத்தியேஸ்வரி, குகனேஸ்வரி (வனிதா) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான கதிர்காமநாதன், பாக்கியம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்றவர்களான நாகேஸ்வரி, செல்லத்துரை மற்றும் இரத்தினமலர் ஆகியோரின் அன்பு மைத்துனரும் சுவேந்திரன், ரவீந்திரன் ஆகியோரின் பெரிய தந்தையும் பவித்திரன், கார்த்திகா, பிரசாந், இந்து, இலக்கியா, சந்தியா, சாணு, சுவேதா, சச்சின், சரன், சாரு, லஹுஸ், தருஸ், நிருத்துயா, திவியா, கீர்த்தனன், பிரசாந்தன், பிதுஷனா, பிரசாத் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஹஸ்வித், சஸ்விகா, ஜேய்பிரவீன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.08.2026) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் இல.21, சுப்பிரமணியம் வீதி அரியாலையில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இல. 21, சுப்பிரமணியம் வீதி,
அரியாலை. (8182)

தகவல் : குடும்பத்தினர்
075 636 7527


## கடை வாடகைக்கு தேவை

கிளிநொச்சி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், வவுனியா பகுதிகளில் கடை வாடகைக்கு இருந்தால் தொடர்பு கொள்ளவும். (2548)

தொடர்பு
075 852 3320

## காணி விற்பனைக்கு

மானிப்பாய் லோட்டன் வீதியில் உள்ள 3¼ பரப்பில் பழைய கால வீடு, வெட்டுக்கிணறுடன் அமைந்துள்ள லைமன் கவுஸ் காணி விற்பனைக்கு உண்டு. (8164)

தொடர்புகளுக்கு
075 077 4745

## வரன் தேவை

97 ஆம் ஆண்டு பிறந்த பெண் கி.பா 34½ நட்சத்திரம் பரணி 1ஆம் பாதத்துடன் கூடிய மணப்பெண்ணுக்கு வரன்தேவை. உத்தியோகம் விரும்பத்தக்கது. (8141)

தொடர்புகளுக்கு
076 457 6500

## வீடு விற்பனைக்கு

தெல்லிப்பளை விவசாய திணைக்களத்துக்கு அருகில் 1¼ பரப்புக் காணியும் இரண்டு அறையுடன் சகல வசதியுடனும் கூடிய வீடும் விற்பனைக்கு உண்டு. (8142)

தொடர்பு
077 147 6526

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கோப்பாய் வடக்கு 7½ பரப்புக் காணி
1½ பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
05 துண்டுகள் விற்பனைக்கு உண்டு.

- நல்ல சூழல்
- நன்னீர் ஊற்று
- யாழ்ப்பாணத்திலிருந்து 6 KM
- பருத்தித்துறை வீதி 1 KM
- இராச வீதி 800 M
- உரும்பிராய் கைதடி செல்லும் பிரதான வீதியிலிருந்து 500 M தூரம்.
- சிரட்டை கொம்பனி அருகாமையில்
- தரகர் தேவையில்லை (8181)

T.P: 077 623 4204, 077 065 4525


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.08.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media